Registered as a Newspaper | பக்கங்கள் 16 | விலை ரூ. 50

புதன் பொங்கை

# உதயன்

சுடர் : 38
கதிர் : 326

புதன்கிழமை 18 ஒக்ரோபர் 2023

ஐப்பசி 01 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

### உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின்

# உண்மையை மறைக்க அரசாங்கம் தீவிர சதி!

### நாடாளுமன்ற அமர்வில் நேற்றுப் பரபரப்பு

**கொழும்பு, ஒக்ரோபர் 18**

ஈஸ்டர்தாக்குதலுடன்தொடர்புடைய பின்னணியை மறைப்பதற்கு அரசாங்கம் தீவிரமான சதிகளைச் செய்துவருகின்றது. அதன் ஒரு பகுதியே 'சனல்-4' ஊடகத்தின் வீடியோக்கள் தொடர்பில் விசாரிப்பதற்காக அமைக்கப்படும் தெரிவுக்குழுவும் என்று நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டினர். எதிர்க்கட்சியின் கூட்டு எதிர்ப்பையடுத்து சபையில் பெரும் அமளிதுமளியும் ஏற்பட்டது. »15

## தேசிய ஒற்றுமைக்காக வருகிறது அலுவலகம்!

### சட்டவரைவு சமர்ப்பணம்

கொழும்பு, ஒக். 18

தேசிய ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தை அமைப்பதற்கான சட்ட »15

## ஹமாஸின் பிடியில் 27 இலங்கையர்கள்

### இலங்கைத் தூதுவர் நிமல் தெரிவிப்பு

டெல்அவிவ், ஒக். 18

ஹமாஸ் அமைப்பால் பிணையக்கைதிகளாக பிடித்துவைக்கப்பட்டிருப்பவர்களில் இலங்கையர்களும் உள்ளனர். இதைவிட, காஸாபகுதியில் 27 இலங்கையர்கள் சிக்கியுள்ளனர். »15

## இலங்கையில் ஊழல் அரசு!

ஐ.எம்.எப்.பிடம் குற்றச்சாட்டு

விரிவு பக். - 15

## 10 வீத சிறார்களுக்கு தொழுநோய் தீவிரம்!

விரிவு பக். - 15

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணையில் தவறு!

### மைத்திரி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 18

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரைமேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து விசாரணைகளும் அநீதியாகவும் தவறாக »15

## குருந்தூர்மலையில் அதிகாரிகள் ஆய்வு!

முல்லைத்தீவு, ஒக். 18

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைபற்று பிரதேசத்தில் உள்ள குருந்தூர்மலை விவகாரம் நாளுக்குநாள் சர்ச்சையாகிவரும் நிலையில், »15

MOBILE



SOCIAL lite

NONSTOP DATA

ரூ. 215/- ரீலோட் செய்யுங்கள்

30 நாட்கள் முழுவதும்

செயற்படுத்துவதற்கு

#170#

அழையுங்கள்

Mobitel Selfcare App

SLTMOBITEL

நிகரற்ற இணைப்பு



உங்கள் கட்டுமானம் முழுமையான தோற்றம் பெற்றிட.... Robbialac

பல வர்ணத் தெரிவுகளுடன் பாரிய இடப்பரப்பிற்கு பூசக்கூடிய, உன்னதத் தரத்திலான Robbialac உடன் உங்கள் கட்டிடத்தின் உட்புற மற்றும் வெளிப்புற சுவர்கள், தரை, கதவுகள் மற்றும் ஜன்னல்கள் என அனைத்திற்கும் வர்ணமயமான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்...உங்கள் கட்டுமானத்திற்கு முழுமையானதோர் தோற்றத்தைப் பெற்றுக் கொடுங்கள்....

Robbialac

Adding Colour to Life

Tel: 0777 577 572 | E-mail: robbialac@lankem.lk | Web: www.robbialac.lk | www.facebook.com/LankemRobbialacSL

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிகழ்நிலைக் காப்புச்சட்டம் அரசமைப்புக்கு முரணானது

## ஊடகவியலாளர்கள் குழு உயர்நீதிமன்றில் வழக்கு

**கொழும்பு, ஒக். 18**

**'இணையங்கள் ஊடாக ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்ப்பதற்காக' எனக் கூறிக்கொண்டு அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள 'நிகழ் நிலைக்காப்புச் சட்டம்' அரசமைப்புக்கு முரணானது என உத்தரவிடக்கோரி, இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் ஐவரும், சிவில் செயற்பாட்டாளர்கள் நால்வரும் இணைந்து உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.**

அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிகழ்நிலைக்காப்புச்சட்ட வரைவானது, அரசமைப்பால் பாதுகாக்கப்பட்டுள்ள பேச்சு மற்றும் கருத்துரிமை, சித்திரவதை மற்றும் மன அழுத்தங்களில் இருந்து பாதுகாக்கின்ற உரிமை, பாகுபாடின்றி நடத்துவதிலிருந்து பாதுகாக்கின்ற உரிமை உள்ளிட்ட பல அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் உள்ளதாக இந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிகழ் நிலைக்காப்புச் சட்டவரைவை நிறைவேற்றுவதற்கு, நாடாளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையும் சர்வஜன வாக்கெடுப்பும் அவசியம் என உயர்நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றும் மனுதாரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸினால் கடந்த 3ஆம் திகதி நிகழ் நிலைக்காப்புச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த சட்டவரைவு கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கும் நிலையில், இதற்கு எதிராக உயர்நீதிமன்றில் இது வரையில் சுமார் 50 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (ம)



## இந்தியா - இலங்கை இடையே பெரிய கப்பற்சேவை விரைவில்

யாழ்ப்பாணம், ஒக். 18

இந்தியா- இலங்கைக்கு இடையிலான படகுச் சேவை முழுமையாக வெற்றிபெற்ற பின்னர், இரு நாடுகளுக்கும் இடையே அனைத்துக் கால நிலைகளிலும் இயங்கக்கூடியதான பெரிய கப்பற்சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படும் என்று யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் கொன்சியூலர் ராகேஷ்நட்ராஜ் ஜெயபாஸ்கர் தெரிவித்தார்.

நாகப்பட்டினம் மற்றும் காங்கேசன்துறை இடையிலான படகுச்சேவை ஆரம்பிக்கப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளும் இந்த வான்கடல் இணைப்பின் நன்மைகளைப் பார்க்கத் தொடங்கும். இது இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான இந்தியாவின் அர்ப்பணிப்பாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# வெடிபொருள்கள் குருநகரில் மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை ஒருதொகுதிவெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடற்படையினர் முன்னெடுத்த விசேட தேடுதல் நடவடிக்கையின்போதே அந்தப் பகுதியிலுள்ள முட்புதருக்குள் பொதியொன்றினுள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் அவை மீட்கப்பட்டன. ரி.என்.ரி. உயர்ரக வெடிபொருள்கள், 3 அடி மற்றும் 4 அங்குல நீளமான பாதுகாப்பு உருகி என்பனவே இதன்போது மீட்கப்பட்டன.

இவை சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் நோக்கில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (ச-26)

# ஆறு அரச வங்கிகளுக்கு மறுசீரமைப்புத் தேவை!

### ஐ.எம்.எப். சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 18

உடனடியாக மறுசீரமைக்கப்பட வேண்டிய நிலையில் இலங்கையில் 6 அரச வங்கிகள் காணப்படுகின்றன. அண்மையில் மேற்கொண்ட ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இந்த வங்கிகளில் 1.4 ட்ரில்லியன் கடன் நிலுவையில் உள்ளது. வழங்கிய கடன்களை மீளப்பெற முடியாதிருப்பதன் காரணமாகவே அவற்றை உடனடியாக மறுசீரமைக்க வேண்டிய தேவையுள்ளது. அதேவேளை இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி உட்பட 31 அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு வலயத்தினுள் காணப்படுகின்றன. இந்த வங்கிகளை திறம்பட இயங்கும் வங்கிகளுடன் இணைத்து செயற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இதேவேளை- சர்வதேச நாணய நிதியத்தின் இந்த அறிவுறுத்தல் தொடர்பில் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க எதுவும் குறிப்பிடவில்லை. அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது தொடர்பாக ஆராய்வதற்கு ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச-6)

# குளவிகள் கொட்டி மூதாட்டி இறப்பு!

கருங்குளவிகளின் கொட்டுக்கு இலக்காகி மூதாட்டியொருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் எழுதுமட்டுவாழ் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வீசிய கடும் காற்றால் மரத்திலிருந்து வீழ்ந்த குளவிக்கூட்டிலிருந்து கலைந்து பறந்த கருங்குளவிகள் அவ்வழியே நடந்துசென்ற மூதாட்டியை கொட்டியுள்ளன. கொட்டுக்குள்ளான மூதாட்டி யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு நேற்று அதிகாலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். (அ-ம-9,131)

### 12 வருட தவமிருப்பில்

# ஒரே பிரசவத்தில் 6 குழந்தைகள்

கொழும்பு, ஒக். 18

கொழும்பு காசல் மருத்துவமனையில் தாயொரு வருக்கு ஒரே பிரசவத்தில் ஆறு குழந்தைகள் பிறந்துள்ளன.

குறித்த ஆறு குழந்தைகளும் ஆண் குழந்தைகள் என மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் அஜித் தண்டநாராயணா உறுதிப்படுத்தியுள்ளார். ராகம, வியாங்கொடையைச் சேர்ந்த 37 வயது பெண்ணொருவரே ஆறு குழந்தைகளையும் பிரசவித்துள்ளார்.

குழந்தைகளின் தந்தை தெரிவிக்கையில்;

கடந்த பன்னிரண்டு வருடங்களாக நாங்கள் குழந்தைக்குத் தவமிருந்தோம். 12 வருடங்களின்பின் மனைவி கருத்தரித்த நிலையில் ஸ்கான் செய்து பார்த்தபோது ஐந்து குழந்தைகள் இருப்பதாகத் தெரியவந்தது. தற்போது ஆறு குழந்தைகள் கிடைத்துள்ளன- என்றார். (ச-6)

# மன்னார் தென் கடற்பரப்பில் இறந்து ஒதுங்கும் ஆமைகள்



மன்னார் தென் கடற் பிராந்தியத்தில் அதிகமான கடலாமைகள் இறந்து கரை ஒதுங்குகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மூன்று தினங்களாக இறந்த ஆமைகளின் சடலங்கள் பரவலாக அவதானிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து. இறந்த ஆமைகளில் இருந்து மாதிரிகள் பெறப்பட்டு பரி சோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன. (ம-60)

# கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு அறிவுறுத்து

### மீறினால் தண்டம்

வவுனியா, ஒக். 18

வவுனியா மாவட்டத்தில் கட்டாக்காலிகளால் விபத்துகளும் உயிரிழப்புகளும் அண்மைக்காலமாகப் பதிவாகிவரும் நிலையில், கால்நடைகளை வளர்ப்போர் முறையாக அவற்றைக் கட்டிவைத்துப் பராமரிக்கும்படி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த அறிவுறுத்தலை மீறும் வகையில், கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகளைக் கையகப்படுத்தி தண்டம் அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்குமாறு வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20,000 ரூபா தராவிட்டால் பெரும் போராட்டங்கள்!

## தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

**கொழும்பு, ஒக்.18**

**எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் அனைத்து அரச ஊழியர்களுக்கும் 20 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும். இல்லாவிட்டால் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.**

- இவ்வாறு இலங்கை அரச அதிகாரிகளின் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்தக் கூட்டமைப்பின் தலைவர் சுமித் கொடிகார நேற்றுமுன்தினம் கண்டியில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது வாழ்க்கைச் சுமை எகிறிவிட்டது. தண்ணீர், மின்சாரம், எரிபொருள், அத்தியாவசிய உணவு, மதிப்பீட்டுக் கட்டணம் உள்ளிட்ட அனைத்தும் கட்டுப்படியாகாத வகையில் உயர்ந்துள்ளது. இன்று எமது பிள்ளைகள் தமது கல்வியை ஒழுங்காகத்தொடர முடியாமல் நிர்க்கதியாகியுள்ளனர்.

வாழ்க்கைச் செலவு எங்களால் எதிர்கொள்ள முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளது எட்டு வருடங்களாக ஐந்து சதம் கூட சம்பள உயர்வு இல்லை. வரவிருக்கும் வரவு - செலவுத் திட்டத்தில் குறைந்தபட்சம் 20 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கிடைக்கும் என்பதே எங்களின் இறுதி நம்பிக்கை.

அது நடக்கவில்லை என்றால், ஜனவரி முதல் தொழில்முறை முடிவுகளை எட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்போம் - என்றார். (எ-இ)

## பாதுகாப்பு வழிகாட்டல்களை வெளியிடும் ம.உ.ஆணைக்குழு

கொழும்பு, ஒக்.18

மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களின் பாதுகாப்பு தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய ஆவணமொன்றை வெளியிடுவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தேசித்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நீதியரசர் எல்.ரி.பி.தெஹிதெனிய தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஆணைக்குழுவின் உறுப்பினர்களான பேராசிரியர் தையமுத்து தனராஜ், பேராசிரியர் ஃபர்ஸானா ஹனீபா, நிமால் புஞ்சிஹேவா மற்றும் கலாநிதி ஜெஹான் குணதிலக ஆகியோரும் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

நாட்டின் ஜனநாயக மற்றும் சிவில் இடைவெளிக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் அவர்களது பணியுடன் தொடர்புபட்ட வகையில் அடக்குமுறைகளுக்கும் மீறல்களுக்கும் உட்படுத்தப்படல், போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் விசேட தேவையுடையோர் முகங்கொடுத்துவரும் சவால்கள் உள்ளடங்கலாக அண்மைய கால அச்சுறுத்தல் நிலைவரம் தொடர்பில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

கடந்தகால அறிக்கைகள் உள்ளிட்ட தகவல்களின் செயற்றிறனான வெளிப்படுத்தல்களின் அவசியத்தை மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்களிடம் வலியுறுத்திய சிவில் சமூகப் பிரதிநிதிகள், ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்கும் செயன்முறை மற்றும் அவசர தொலைபேசி சேவை என்பன வலுப்படுத்தப்படவேண்டியது அவசியம் எனவும் சுட்டிக்காட்டினர்.

இவற்றுக்குப் பதிலளித்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் மற்றும் உறுப்பினர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களின் பாதுகாப்பு தொடர்பான வழிகாட்டல்களையும் பரிந்துரைகளையும் வெளியிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், அவை தொடர்பில் பரந்துபட்ட கலந்துரையாடல் செயன்முறையில் ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (எ-இ)



## தோல்விக்கு அஞ்சியே அரசமைப்பு சீரமைப்பு

### ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 18

தேர்தல் தோல்விக்கு அஞ்சியே தேர்தல் முறைமை மாற்றம் உள்ளடங்கலான அரசமைப்பு மறுசீரமைப்பு நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது. இது ஏற்புடைய நடவடிக்கையாக அமையாது.

-இவ்வாறு சட்டத்துறைப் பேராசிரியரான முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய நாடாளுமன்றம் மக்களின் நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கவில்லை,

ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல், அதற்காக சர்வஜன வாக்கெடுப்பை நடத்துதல், நாடாளுமன்ற தேர்தல் முறைமையை முழுமையாக மாற்றல் போன்ற விடயங்கள் தொடர்பில் அரசு ஆரம்பகட்ட நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்தத்திட்டங்களைமுன்னெடுப்பதற்கு அதாவது அரசமைப்பு மறுசீரமைப்பு சார்ந்த நடவடிக்கைகளுக்கு மக்களின் ஆணை அவசியம்.

நாடாளுமன்றத்துக்கு மக்கள் ஆணை இல்லை என்பது அனைவருக்கும் தெரியும். அதனால்தான் நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு பொதுத்தேர்தலை நடத்துமாறு வலியுறுத்துகின்றோம். மக்கள் ஆணையுடன் அமையும் புதிய ஆட்சியின்கீழ் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் - என்றார். (ஈ-44)

## புதினம் தெரியுமோ?

கம்பஸில கட்டியிருக்கிற முள்ளிவாய்க்கால் தூபிக்கு நித்தியகண்டம் பூரண ஆயுசு தான் போல. முதலொருக்கா இரவோட இரவா அதை இடிச்சு பெரிய பிரச்சினையானது. ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் எண்டு கம்பஸ் பெடியளும், கட்சியளும் பெரியளவில எதிர்ப்புக் காட்டினதால, பிறகு அதே இடத்தில இப்ப இருக்கிற தூபி கட்டுப்பட்டது. அதோட பிரச்சினை முடிஞ்சுது எண்டு பார்த்தால், இப்ப இன்னொரு பக்கத்தால பிரச்சினை கிளம்பியிருக்குது.

பெட்டிசம் போடுறது எண்டது எங்கட ஆக்கள் சிலருக்கு முழுநேர வேலை. தங்கட வேலையளை ஒழுங்காச் செய்யினமோ இல்லையோ, அடுத்தவையைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் எழுதி அனுப்பினாத் தான் சிலருக்கு அண்டைக்கு சோறு தொண்டைக்குள்ள இறங்கும். அப்பிடிப்பட்டவை ஊர்வழியளில திண்ணையில தான் இருப்பினம் எண்டு நினைக்கக்கூடாது. மெத்தப் படிச்சவை இருக்கிற இடம் எண்டு சொல்லுற கம்பஸில கூட இப்பிடியான ஆக்கள் இருக்கத்தான் செய்யினம். அப்பிடி ஒரு வேலைவெட்டி இல்லாத லெக்சர் ஒராள் போட்ட பெட்டிசம் தான் முள்ளிவாய்க்கால் தூபிக்கு ஆப்பா மாறியிருக்கு. அந்த லெக்சருக்கும் இப்பஇருக்கிற துணைவேந்தருக்கும் எட்டாப் பொருத்தம். இந்த லெக்சர் செய்யிற எல்லாத் திருகுதாளங்களையும் கண்டுபிடிச்சும், அவரின்ர 'துறைத்தலைவர்' பதவியைப் பிடுங்கினதாலயும், துணைவேந்தர் மேல உள்ளுக்க கறுவிக்கொண்டு திரிஞ்சிருக்கிறார் இந்த லெக்சர். 'இந்தமுறையோட இவர் சரி. அடுத்த முறை துணைவேந்தரா வரமாட்டார்' எண்டு எல்லாருக்கும் சொல்லித் திரிஞ்ச இந்த லெக்சர், மானியங்கள் ஆணைக்குழுவுக்கு 'துணைவேந்தர் ஊழல் செய்யிறார், அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யிறார்' எண்டெல்லாம் பெட்டிச மழை பொழிஞ்சிருக்கிறார். ஆனால் மானியங்கள் ஆணைக்குழுவுக்கு துணைவேந்தரைப் பற்றித் தெரியுமெண்டதால இந்தப் பெட்டிசங்களை அப்பிடியே குப்பைத் தொட்டிக்குள்ள போட்டிட்டினம். கடைசியா உந்த லெக்சரின்ர சாத்திரத்தைப் பொய்யாக்கி, திரும்பவும் அவரே துணைவேந்தரா வந்திட்டார்.

எண்டாலும் தன்ர முயற்சியில சற்றும் மனந்தளராத எங்கட பெட்டிச லெக்சர், இந்தமுறை கொஞ்சம் வித்தியாசமா தன்ர பெட்டிசத்தை எழுதியிருக்கிறார். ஊழல், மோசடி எண்டால் தானே நம்பமாட்டினம். அதால கம்பஸுக்க அவரின்ர காலத்தில கட்டுப்பட்ட முள்ளிவாய்க்கால் தூபியைப் பற்றி கொளுத்திப் போட்டிருக்கிறார் உந்தப் பெட்டிச லெக்சர். உதே லெக்சர்தான் 'இந்தத் துணைவேந்தர்தான் தூபியை இடிச்சவர்' எண்டு கம்பஸ் முழுக்க பத்தவைச்சவர். இப்ப அந்தப் பிளேட்டை அப்பிடியே திருப்பிப் போட்டு, துணைவேந்தருக்குச் சிக்கல் குடுக்கிறதா நினைச்சு, இப்ப தூபிக்குச் சிக்கலைக் கொண்டு வந்திருக்கிறார் கல்மிசக் 'கபில' மனம் கொண்ட பெட்டிச லெக்சர். மரங்களைப் பற்றி படிப்பிச்சுப் படிப்பிச்சு ஆளுக்கு மூளையும் மரமாப் போயிருக்கோணும் போல. அதுதான் அவலை நினைச்சு இப்ப உரலை இடிச்சு, தூபிக்கு உலைவைக்க வெளிக்கிட்டிருக்கிறார். ஆனால் துணைவேந்தர் விசயத்தில பார்த்துக் கொண்டிருந்த மாதிரி தூபி விசயத்தில ஒருத்தரும் பார்த்துக் கொண்டிருக்க மாட்டினம். வலியப் போய் வில்லங்கத்தை விலைக்கு வாங்கியிருக்கிறார் எண்டது ஆளுக்கு கெதியில விளங்கும் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்தை விவாதத்துக்கு அழைக்கிறது ஐ.தே.கட்சி!

கொழும்பு, ஒக்.18

எதிர்க்கட்சித்தலைவர் சஜித்பிரேமதாஸவை தன்னுடன் பகிரங்க விவாதத்துக்கு வர வேண்டும் என்று சவால் விடுத்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செய லாளரான பாலித ரங்கே பண்டார.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி கூட்டணியின் வேட்பாளராக சஜித் பிரேமதாஸவை ஐக்கிய மக்கள் சக்தி பெயரிட்டுள்ளது. ஆனால் ரணில் விக்கி ரமசிங்க களமிறங்கினால் சஜித் பிரேம தாஸ போட்டியிடமாட்டார் என பாலித ரங்கே பண்டார அறிவித்தார். இந்தக் கருத்தை ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்திருந்தது. எனினும், பாலித ரங்கே பண்டார மீண்டும், மீண்டும் அதே கருத்தைக் கூறிவருகின்றார்.

இந்தநிலையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ எப்படியும் போட்டியிடமாட்டார் என்பதை உறுதியா கக் கூறுகின்றேன் என்று பாலித ரங்கே பண்டார மீண்டும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் எந்தவொரு தொலைக்காட்சியிலும் சஜித்துடன் விவா தம் நடத்துவதற்குத் தயாராகவே இருக் கின்றேன், இந்த விடயம் பற்றிக் கதைப் பதற்கு அவருக்கு அச்சம் எனில், வேறு விடயம் பற்றிக் கலந்துரையாடுவதற்கா கவும் அவர் விவாதத்துக்கு வர வேண்டும் - என்றார். (ஏ-44)


**ஒப்பந்த அடிப்படை**
**கிளை முகாமையாளர் (Co - OP FRESH)**


எமது சங்கத்தின் **CO-OP FRESH** விற்பனை நிலையத்திற்கு கிளைமுகாமையாளர் (ஒப்பந்த அடிப்படை) தேவை. தகைமை உடையோர் அலுவலக நேரத்தில் நேரடியாக தொடர்புகொண்டு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும். மேலதிக விபரங்கள் நேரில் தெரிவிக் கப்படும். **விண்ணப்ப முடிவுதிகதி - 24.10.2023**

பொதுமுகாமையாளர்,
ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம்.


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஓய்வு நிலை அதிபர்

**காசிப்பிள்ளை தவராசா**



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அத்துயரில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 28.01.1938 மறைவு 16.10.2023

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.

(cs.52531(N.1)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சிரேஸ்ட ஆசிரியர் திருமதி தயாநிதி அருந்தவராசா அவர்களின் அன்புத் தந்தை

**மாணிக்கர் செல்லத்துரை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 16.11.1939 இறப்பு 14.10.2023

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!

ஆசிரியர் கழகம்
யா/ நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை.

(cs.26633(N.1)

## முசலி பிரதேச சபை கேள்வி அறிவித்தல்- 2024

முசலி பிரதேச சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட மாட்டிறைச்சிக் கடைகளுக்கான **2024**ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான (01.01.2024 – 31.12.2024) கேள்வி கோரப்படுகின்றது.

**கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி** : 19.10.2023-09.11.2023 ந.ப.12.00மணிவரை
**கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி** : 09.11.2023 பிற்பகல் 2.00 மணிவரை
**கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி** : 09.11.2023 பிற்பகல் 2.00 மணி (வியாழக்கிழமை)

கேள்விப்பிணைப்பணம், கேள்விப்பத்திரக்கட்டணம் ஆகியவைகளை முசலி பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 2.00 மணி வரை செலுத்தி கேள்வி படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி விண்ணப்பத்திரங்கள் பூர்த்திசெய்யப்பட்டு **"தலைவர்/செயலாளர், முசலிப் பிரதேச சபை, சிலாவத்துறை"** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ கையளிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "...........**மாட்டிறைச்சி கடைக்கான கேள்வி** 2024" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியாகிய 09.11.2023 பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது .

விண்ணப்பத்திரங்கள் 09.11.2023ஆந் திகதி பிற்பகல் 02.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு கேள்விகள் உடனே முசலிப் பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும். இச்சந்தர்ப்பத்தில் கேள்வியாளர்கள் அல்லது அவரது அனுமதிக்கப் பட்ட கடிதத்துடன் பிரதிநிதிகள் உடன் இருக்க அனுமதிக்கப்படுவார்கள் .

சித்திகரமான கேள்விகாரர் 2024 ஆம் ஆண்டிற்கு முசலிப் பிரதேச சபை மாட்டிறைச்சிக் கடைகளில் இறைச்சி விற்பனை செய்வதற்கு கேள்வி சபையால் / அரச விலைக்கட்டுப்பாட்டு திணைக்களத்தால் தீர்மானிக்கின்ற விலைகளில் இறைச்சி விற்பனை செய்யப்படல் வேண்டும்.

முசலி பிரதேச சபையினால் கேள்விகள் ஏற்கும் நிராகரிக்கும் உரிமை தலைவருக்கும் கேள்விசபைக்கும் உரியது. குத்தகை நிலு-வைகளை கொண்டிருப்போர், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் கேள்விகோர அனுமதிக்கப்படமாட்டார்கள் .

கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை/ தகவல்களை பிரசே சபையின் பிரதான அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

- தெரிவு செய்யப்படுகின்ற கேள்விதாரார்கள் கேள்வித்தொகையில் 1/3பகுதியை 17.11.2023ஆம் திகதிக்குள் பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் செலுத்தி ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளவேண்டும் தவறும் பட்சத்தில் முன்னறிவித்தலின்றி கேள்வி நிராகரிக்கப்படும். மேலும் 12 மாதக்குத்தகை பணத்தினை 08 மாதகாலப்பகுதிக்குள் செலுத்தவேண்டும் 1/3 வைப்புப்பணம் வருட இறுதியில் தங்களுக்கு மீளளிக்கப்படும்.

| இல | குத்தகை விபரம் | மீளளிக்கமுடியாத கேள்விப்பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்தகேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01 | வேப்பங்குளம் இறைச்சிக்கடை | 1000.00 | 10,000.00 | 516,670.00 |
| 02 | P.P.பொற்கேணி இறைச்சிக்கடை | 1000.00 | 5,000.00 | 258,940.00 |
| 03 | அகத்திமுறிப்பு இறைச்சிக்கடை | 1000.00 | 11,000.00 | 567,490.00 |
| 04 | பண்டாரவெளி இறைச்சிக்கடை | 1000.00 | 9,000.00 | 438,020.00 |
| 05 | முத்தரிப்புத்துறை (அரிப்பு) இறைச்சிக்கடை | 1000.00 | 11,000.00 | 566,280.00 |
| 06 | சிலாவத்துறை இறைச்சிக்கடை | 1000.00 | 16,000.00 | 805,860.00 |
| 07 | கொண்டச்சி இறைச்சிக்கடை | 1000.00 | 7,000.00 | 366,630.00 |
| 08 | மறிச்சுக்கட்டி இறைச்சிக்கடை | 1000.00 | 13,000.00 | 626,780.00 |
| 09 | புதுவெளி இறைச்சிக்கடை | 1000.00 | 5,000.00 | 248,050.00 |

**தலைவர்,**
**பிரதேச சபை முசலி**

(cs.52908) (N-1)

## மரண அறிவித்தல்

பிறப்பு 30 • 05 • 1934



இறப்பு 17 • 10 • 2023

திருமதி

**கிருஸ்ணபிள்ளை புவனேஸ்வரி**


நீர்வேலி வடக்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணபிள்ளை புவனேஸ்வரி (17.10.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பொன்னையா அன்னம்மா அவர்களின் மகளும், திரு. திருமதி சின்னத்தம்பி தங்கம்மா ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி கிருஸ்ணபிள்ளை யின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நித்தியானந்தன் மற்றும் நித்திய லட்சுமி, ஜெயலட்சுமி (லண்டன்) காலஞ்சென்ற ஜெயானந்தன் மற்றும் விஜய லட்சுமி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ராகினி (சுவிஸ்), விஜயரத்தினம் பத்மகுமாரன் (லண்டன்), நந்தகுமார் ஆகியோரின் மாமியாரும், காலஞ் சென்றவர்களான விக்கினேஸ்வரி, மகேஸ்வரி, இராஜேஸ்வரி, கமலேஸ்வரி மற்றும் பஞ்சநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கார்த்திகா, தயந்தன், கார்த்திகன், கீர்த்திகா, மயூரிகா, தர்சிகன் (சுவிஸ்) நிரோசன், தனுசிகா, யசி, சுகனியா, கபீஷன், சபீசன் ஆகியோரின் பேர்த்தியும், ஹருணியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2023) புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் நீர்வேலி வடக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

தகவல்:
**077 990 0035** (cs.52535 AK - 1 **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையர் போராட்டமே மிகமிகப் பயங்கரமானது!

## குணவங்ச தேரர் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.18**

**உலகில் நடைபெறும் சமர்களில் வாழ்வதற்கானபோராட்டமே பாரதூரமானது - பயங்கரமானது, அந்த சமரிலேயே இலங்கை மக்கள் தற்போது ஈடுபட்டுவருகின்றனர் என்று எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை மக்களுக்கு யோசிப்பதற்கு நேரமில்லை, வலி சுமந்த வாழ்க்கையையே வாழ்கின்றனர். பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

வாழ்வதற்காகவும் போராட வேண்டியுள்ளது. இனவாத சமர், குல சமர், நாடுகளுக்கிடையிலான சமர் என இவ்வுலகில் பல சமர்கள் உள்ளன. ஆனால் இவற்றையெல்லாம் விடவும் வாழ்வதற்கான சமரே போராட்டமே பயங்கரமானது.

அந்தப் போராட்டத்தில்தான் நாம் ஈடுபட்டுவருகின்றோம்.

தற்போதைய அரசியல் வெறுத்துவிட்டது. மக்கள் கண்ணீர் சிந்தாமல் வாழக்கூடிய யுகமே எமக்கு வேண்டும். நான் மக்கள் பக்கமே நிற்கின்றேன். கோத்தாபய ராஜபக்சவுக்கு வாக்களிக்க வேண்டும் என்று நான் எந்தவொரு இடத்திலும் கோரியதில்லை - என்றார். (எ-44)

# நானாட்டான் பாடசாலையில் தெய்வச் சிலைகள் பிரதிஷ்டை

மன்னார், ஒக் .18

சரஸ்வதி பூஜையை முன்னிட்டு மன்னார் - நானாட்டான் பிரதேச செயலக பிரிவிலுள்ள மோட்டக்கடை சிவராஜா இந்து வித்தியாலயத்தில் பிள்ளையார் மற்றும் சரஸ்வதி தெய்வச் சிலைகள் திறக்கப்பட்டன.

இந்த நிகழ்வு நானாட்டான் பிரதேச செயலர் மாணிக்கவாசகர் சிறிஸ்கந்தகுமார் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் நானாட்டான் ஸ்ரீ செல்வ முத்துமாரியம்மன் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ கதிரேசன் குருக்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-213)



# மாம்பழ உற்பத்தி வலயத்தை நேரில் பார்வையிட்ட அமைச்சர்

யாழ்ப்பாணம் - தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் கிராமத்தில் உள்ள மாம்பழ உற்பத்தி வலயத்தை விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கடந்த ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டார்.

2018ஆம் ஆண்டு விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மேற்படி மாம்பழ உற்பத்தி வலயமானது 500 செய்கையாளர்களை உள்ளடக்கியுள்ளது. அங்கு சென்ற விவசாய அமைச்சர் செய்கையாளர்களைச் சந்தித்து அவர்களுடைய குறை நிறைகளைக் கேட்டறிந்திருந்தார்.

விவசாயிகள், குரங்குகளைக் கட்டுப்படுத்த வாயுத் துப்பாக்கி, வீதிப் புனரமைப்பு மற்றும் மாம்பழத்தை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர். (எ-131)



# கிழக்கு மருத்துவமனைகளுக்கு சிறுநீரக சிகிச்சை இயந்திரங்கள்

திருகோணமலை, ஒக்.18

சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் பல இலட்சம் ரூபா பெறுமதியான இயந்திரங்கள் கந்தளாய் மருத்துவமனை மற்றும் பதுளை மருத்துவமனையால் வழங்கப்பட்டுள்ளன.

ஐ.ஓ.சி. நிறுவனத்தின் தலைவர் தீபக் தாஸிடம் கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் முன்வைத்த கோரிக்கையின் பிரகாரம் அவை பெற்றுக்கொள்ளப்பட்டன.

இயந்திரங்களைக் கையளிக்கும் நிகழ்வு திருகோணமலை ஐ.ஓ.சி. தலைமையகத்தில் இடம்பெற்றது.

இலங்கையில் சிறுநீரக நோயாளர் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் சூழலில், இந்த நன்கொடை மூலம் சிறுநீரக சிகிச்சைகளுக்காகச் செல்லும் நோயாளர்களின் உயிராபத்துகளை எதிர்காலத்தில் குறைத்துக்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ச-10)

# ஆணையாளர் இல்லாததால் வருமான இலக்கில் சிக்கல்!

கொழும்பு, ஒக்.18

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு நிரந்தர ஆணையாளர் ஒருவரை நியமிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதத்தால் வருமான இலக்குகளை அடைவது சிரமமாக உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒன்றரை மாதங்களாக இறைவரித் திணைக்களத்துக்கு நிரந்தர ஆணையாளர் நியமிக்கப்படவில்லை. சட்டத்தின் அடிப்படையில் சில கடமைகளைச் செய்ய நிரந்தர ஆணையாளர் அவசியம் என்பதால் திணைக்களத்தின் செயற்பாடுகளில் பெரும்பகுதி முடங்கியுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நிரந்தர ஆணையாளருக்கே செலுத்தப்படாத வரி நிலுவைகளை வசூலிக்கவும், வங்கிக் கணக்குகளை இடைநிறுத்தவும், புதிய வரிக் கோப்புகளைத் திறக்கவும், வரி செலுத்தத் தவறியவர்களின் சொத்துகளைக் கைப்பற்றவும், வரி மதிப்பீட்டு அறிக்கைகளைத் தொகுக்கும் உத்தரவுகளை வழங்கவும்முடியும்.

நிரந்தர ஆணையாளர் இல்லாததால் பல நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளன என்றும், நிரந்தர ஆணையாளர் ஒருவரை உடனடியாக நியமிக்க வேண்டும் என்றும் அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த ஆண்டு அரசின் வரி வருமான இலக்கு ஆயிரத்து 667 பில்லியன் ரூபாவாகும். இந்த இலக்கை அடைய இன்னமும் 466 பில்லியன் ரூபா தேவை என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# ஓய்வூதியம் வழங்கலில் எதிர்காலத்தில் சிக்கல்!

2028 அல்லது 2030 ஆம் ஆண்டுக்குள் ஓய்வூதியம் வழங்குவதில் நிதி நெருக்கடியை சந்திக்க நேரிடும் என ஓய்வூதியத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஓய்வூதியத் திணைக்கள அதிகாரிகளுடன் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது. எதிர்காலத்தில் ஓய்வூதியக் கொடுப்பனவு நெருக்கடி ஏற்படுமா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியதற்கு, அவர்கள் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளனர். (எ-இ)

# சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக்.18

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் , சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள நிகழ்வில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து பரிபாலனசபைத் தலைவர் த.சோதிலிங்கம் தலைமையுரை ஆற்றுவார்.

சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் ச. முகுந்தன் "சைவ வாழ்வியலில் சக்தி வழிபாடு" என்னும் விடயப்பொருளில் ஆற்றுவார். சொற்பொழிவில் இருந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நெருக்கடிகளைச் சந்திக்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

கொழும்பு, ஒக்.18

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயர்மட்ட நிர்வாகத்தின் பல முக்கியமான பதவிகளில் இருந்தவர்கள் பதவி விலகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விற்பனை மற்றும் நிதித்துறைகளில் பணியாற்றிய தலைவர்கள் உட்படப் பல அதிகாரிகள் பதவி விலகியுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் வெளிநாடு சென்றுள்ளனர்.

இந்த நிலைமை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகக் கட்டமைப்பில் சில தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

வெற்றிடங்களுக்கு வேறு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், ஆனால் பதவி விலகியவர்கள் நீண்ட காலமாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய உயர் அதிகாரிகள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய களஞ்சிய நிலையத்தின் தலைவர் மொஹமட் உவைஸ் தனிப்பட்ட காரணங்களுக்காக அண்மையில் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு திகதி - 11.03.1972 பதிவு இல - J/1594

# பதவி வெற்றிடம்

**01. பதவி - களஞ்சிய மேற்பார்வையாளர் (01)**

குறியீட்டு இல. : 207/12 (02/2022 இன்படி)

சம்பள அளவுத் திட்டம் : 18820 - 170X10 - 185X10 - 22370

பால் : ஆண்

**தகைமைகள் :-**

அ. கூட்டுறவுப் ஊழியர் 13வது சம்பளத்திட்டப் பதவியில் களஞ்சியப் பொறுப்பாளர் / கொள்வனவு உத்தியோகத்தர்/கிளை மேற்பார்வையாளர் / கிளை முகாமையாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

ஆ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

இ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த சாதாரணதரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளிற்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி உட்பட 03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

**குறிப்பு:**

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. கணினி அறிவு மேலதிக விசேட தகைமையாக கருதப்படும்.
03. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
04. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
05. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவுதிகதிக்குப் பின்னரும் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி 10.11.2023**

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களை சங்கத் தலைமைக்காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ். வதிவிடச்சான்றிதழ். பிறப்புச் சான்றிதழ். சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் களஞ்சிய மேற்பார்வையாளர் (207/12) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு **"தலைவர் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். டச்சு வீதி சாவகச்சேரி** எனும் முகவரிக்கு 10.11.2023ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி**
**கூட்டுறவுச் சேவையிலுள்ள**
**தலைவர் - திரு.சி.சுதர்சன்**
**18.10.2023**

**ப.தெ.வ.அபி.கூட். சங்கம்**
**டச்சு வீதி, சாவகச்சேரி.**

(cr.40788) (N.1)


## முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஒக்.18

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் சங்கீத பூஷணம் பூத்தகொடி புகழ் செ. குமாரசாமி அரங்கில் நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தொடக்கவுரையை முத்தமிழ் மன்றக் காப்பாளர் விரிவுரையாளர் கவிஞர் வேல் நந்தகுமாரும் அரங்கத் திறப்புரையை சங்கீத பூஷணம் கே.எஸ். சிவஞானராஜாவும் நிகழ்த்தவுள்ளனர்.

முத்தமிழ் விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு மற்றும் ஆசிரிய மாணவர்களின் நடனம், வில்லிசை நாடகம் உள்ளிட்ட கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச்செயலர் சிவபாலன் குணபாலன், துணுக்காய் வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் நாகரட்ணம் இராஜன், முகரம் அறக்கட்டளை பொ.பிரசாந்தன், குடத்தனை அ.த.க. பாடசாலை ஆசிரியை பாரத் வீணாவாஹினி வேலுப்பிள்ளை, அறக்கட்டளையைச் சேர்ந்த வே.க ஜேந்திரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ய-60)

## ஆன்மிகப் பிரசாரகர் கற்கைநெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 18

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் ஆன்மிகப் பிரசாரகர் கற்கைநெறியின் நான்காவது அணி ஆரம்ப நிகழ்வு கடந்த சனிக்கிழமை ஆனைப்பந்தி குருகுலத்தில் இடம்பெற்றது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.செந்தூரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் எழுத்தாளர் சிவஸ்ரீ தியாக.மயூரகிரிக் குருக்கள் ஆசியுரையாற்றினார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் ச. லலீசன் விருந்தினராகக் கலந்துகொண்டு ஆன்மிகப்பிரசாரகர் கற்கைநெறியை ஆரம்பித்து வைத்தார். (ச-66)

## தென்மராட்சியில் ஆசிரியர் தினம்

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் தின விழா கடந்த வெள்ளிக்கிழமை கொடிகாமம் ஏ-9 வீதியில் அமைந்துள்ள நட்சத்திரமஹால் மண்டபத்தில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்றது.


நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் க.மகேசன், சிறப்பு விருந்தினராக வடமாகாணக் கல்வி நிர்வாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிரதீபா காயத்திரி, கஜபதி ஆகியோர் பங்கேற்றனர்.

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற அதிபர், ஆசிரியர்களுக்கு நிகழ்வில் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து ஆசிரியர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. (ச-159)


" ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

# மரண அறிவித்தல்

மண்ணில் 29 03 1966



விண்ணில் 16 10 2023

## விசுவலிங்கம் தியாகலிங்கம்

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் தியாகலிங்கம் கடந்த 16.10.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு புதல்வனும் காலஞ்சென்ற தம்பிஜயா தனலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் அமிர்தாவின் அன்புக் கணவரும் அபிராமின் பாசமிகு தந்தையும் விஜயகுமார், விஜயராணி, இரத்தினகுமார், அமரர் சந்திரகுமார், சூரியகுமார், அமரர் ஸ்ரீதரன், சத்தியலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பகீரதன் (U.K) , கௌரி (டென்மார்க்), சயந்திரதன் (டென்மார்க்), சுகிர்தா (U.K) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.10.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பாற்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

**நாவலடி லேன்,**
**திருநெல்வேலி மேற்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# பாசமுகம் காணாது பத்தொன்பது ஆண்டுகள்

மலர்வு 17 04 1953



உதிர்வு 18 09 2004

## அமரர் திலகவதி குமரவேல்

(முன்னாள் பொது முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், சுன்னாகம்.)

**திதி : சதுர்த்தி (18.10.2023)**

பத்தொன்பது ஆண்டுகள்
பறந்து போனதுவோ - உங்கள்
பாசமுகம் காணாது
பரிதவித்து நாமிங்கே....

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"திருவேரகம்"
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உயிர்மாய்ப்பெனும் கொடிய நோய்

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இரு மாணவிகள் ஒரேசமயத்தில், ஒரேயிடத்தில் தவறான முடிவையெடுத்து உயிர்மாய்த்திருந்தனர். வல்வெட்டித்துறையிலும் அதேதினத்தில் 63 வயதான நபரொருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருந்தார். இதற்கு முதல்நாள் ஞாயிற்றுக்கிழமையும் இளைஞரொருவர் காதல் விவகாரத்தால் தவறான முடிவைத் தேடிக்கொண்டிருந்தார். இப்படித் திரும்பும் இடமெல்லாம் தவறான முடிவெடுத்து உயிர்மாய்க்கும் செய்திகளே நம்மை முற்றுகையிடுகின்றன. வடக்கு – கிழக்கில் உயிர் மாய்த்தல் என்பது பெரும் சமூகப் பிரச்சினையாக உருவெடுத்திருக்கின்றது என்பதையே இந்தச் சம்பவங்கள் நெற்றிப் பொட்டில் அறைந்ததைப்போல உணர்த்துகின்றன. பிரச்சினைகளை எதிர்கொள்ளமுடியாது உயிர்மாய்ப்பவர்களில் பெரும்பாலானோர் இளைஞர், யுவதிகளாக இருக்கும் நிலையில், இது சாதாரணமாகக் கடந்து சென்றுவிட முடியாத ஒன்றாகும். உயிரை மாய்த்துக் கொள்ளல் என்பது, மக்கள் மத்தியில் சமூக, பொருளாதார, அரசியல் அதிருப்தியையும், சமூக உள ரீதியான அழுத்தங்களையும் எடுத்துக்காட்டும் குறியீடு என்று கொள்ளலாம். இலங்கையில் 4 மணித்தியாலத்துக்கு ஒருவர் என்ற அடிப்படையில் நாளொன்றுக்கு 9 பேர் உயிரை மாய்த்துக் கொள்கின்றனர் என்று பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வொன்று கூறுகின்றது. இவ்வாறு இறப்பவர்களில் 40 வீதமானோர் கல்வி கற்றவர்கள் எனவும் அவர்களுள் 22 வீதமானோர் பட்டப்படிப்பை முடித்தவர்கள் எனவும் அந்த ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போதைய இளைய சமூகத்தினர் தொழில்நுட்ப ரீதியாகவும், கல்வியறிவு ரீதியாகவும் மேம்பட்டிருந்தாலும் சாதாரண வாழ்க்கையை எதிர்கொள்ளும் பக்குவமற்றே இருக்கின்றனர். நடைமுறைப் பிரச்சினைகளை எதிர்கொண்டு அவற்றுக்கான தீர்வுகளைக் காண்பதற்கு இயலாதவர்களாகவே இருக்கின்றனர். இவற்றுக்குப் பெற்றோரின் தற்போதைய குழந்தை வளர்ப்பு முறைமை, பரீட்சை நோக்கமாகக் கொண்ட கல்வி முறை, போதை வஸ்து பாவனை, பொருளாதாரச் சிக்கல்கள் என்று பல காரணங்கள் இருக்கின்றன. இதனால் திடீரெனப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும்போது அவற்றுக்கான மூலங்களைக் கண்டறிந்து தீர்வைப் பெறாமல் அவற்றைக் கையாள முடியாமல் தவறான முடிவுகளை நோக்கி இளையோர் உந்தப்படுகின்றனர்.

இளைஞர், யுவதிகளிடையே காணப்படும் இவ்வாறான மனத்திடம் இல்லாத போக்கு எதிர்காலத்தில் பெரும் சமூகப்பிரச்சினையாகவே உருவெடுக்கும். உயிர் மாய்ப்பதே தீர்வு என்ற இந்த மனப்போக்கை வளர விடுவது ஆபத்தானது. இதைத் தடுக்கவேண்டியது ஒவ்வொருவரினதும் கடமை. உயிரை மாய்க்கும் முயற்சியில் ஈடுபடும் தரப்பினரை அடையாளம் கண்டு அவர்கள் தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டும். குழந்தைகளை வளர்க்கும் பெற்றோர் சிறுவயது முதலே குழந்தைகளுக்கு தன்னம்பிக்கையை ஊட்டி அவர்கள் சுயமாக தனியாகச் செயற்படக்கூடிய வகையில், எந்தப் பிரச்சினையென்றாலும் அதனை எதிர்கொண்டு வாழும் மனோநிலையோடு வளர்வதற்கு இடமளிக்க வேண்டும்.

ஒருவர் மனரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தால் அவரைச் சூழ இருப்பவர்கள் அதை அவதானிக்காதிருப்பதும் இவ்வாறான அநியாய உயிரிழப்புகளுக்கு முதற்காரணம். பாதிக்கப்பட்டவர்கள் இனங்காணப்பட்டு முறையாக சிகிச்சை வழங்கப்படாமையும் இதற்குப் பிரதான காரணம். ஆரோக்கியமான எதிர்காலச் சந்ததியைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் இந்த விடயங்களில் நாம் அனைவரும் கவனம் செலுத்துவது அவசியமாகும். அதிகரித்து வரும் உயிர் மாய்த்தல்களைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது தடுப்பதற்கு அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள், உளவள ஆலோசகர்கள், சமயத் தலைவர்கள், சமூக முக்கியஸ்தர்கள், புத்திஜீவிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து சரியான திட்டமிடல்களையும், நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவேண்டும். கண் முன்னே நம் சந்ததி உயிர்மாய்க்கும் கலாசாரத்தை தடுத்து, உளவுரம் கொண்ட, வளமான எதிர்காலத்தை உருவாக்கும் பொறுப்பு நம் எல்லோரையும் சார்ந்தது.

### நாளொரு நல்வார்த்தை

குறிக்கோளை அடையும் முயற்சியில்தான் மகிமை இருக்கிறது. அந்தக் குறிக்கோளை அடைவதில் இல்லை.

- மகாத்மா காந்தி -



# இந்தியாவுடன் செய்த ஒப்பந்தத்தில் மர்மம்!

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு



**கொழும்பு, ஒக்.18**

**இந்திய - இலங்கைக்கு இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தித்துறை ஒத்துழைப்பு ஒப்பந்தம் வெளிப்படைத்தன்மையற்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று கேள்வி நேரத்திலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பால் உற்பத்தித்துறையில் தன்னிறைவடைய இந்தியாவால் முடிந்துள்ளது. அது அவர்களது திறமையாகும்.

இந்தநிலையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தித்துறை ஒத்துழைப்பு ஒப்பந்தம் முதல் தடவை பேச்சுகளின்போது தோல்வியடைந்திருந்தது.

தற்போது இந்த ஒப்பந்தம் வெற்றியளித்துள்ளது என்று அரசாங்கம் கூறியுள்ளதுடன், அதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அன்று தோல்வியடைந்த ஒப்பந்தம் இன்று வெற்றிபெற என்ன காரணிகள் ஏதுவாக இருந்தன என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்.

ஒப்பந்தத்தை கைச்சாத்திட அரசாங்கம் எடுத்திருந்த தீர்மானங்கள் தொடர்பில் வெளிப்படைத்தன்மையான பேச்சுகள் அவசியமாகும்.

நான் எவர்மீதும் சேறு பூச இந்தக் கேள்விகளை எழுப்பவில்லை. தொழிற்சங்கங்கள்தான் இந்த விடயத்தை எனது கவனத்துக்குக் கொண்டு வந்தன.

இந்த விடயம் தொடர்பில் தொழிற்சங்க உறுப்பினர்கள் துறைசார் அமைச்சரிடம் சென்று கேள்வியெழுப்பிய போது, தமக்கு ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்துதான் அந்த அமைச்சரவைப் பத்திரம் அனுப்பப்பட்டது என்றும், தமக்கு இதில் ஒன்றும் செய்ய முடியாது என்று பதிலளித்தார்.

இதுதான் வெளிப்படைத்தன்மையா? எமது நாட்டில் 30க்கும் அதிகமான என்.எல்.டி.பி. பால் உற்பத்தி மையங்களையும் மில்க்ரோவையும் விற்பனை செய்வதா? அரசாங்கத்தின் நோக்கம் என கேள்வியெழுப்புகிறோம்.

இதுதான் சௌபாக்கிய ஆட்சியின் எதிர்காலத் திட்டமா? செல்வந்தர்களுக்கு இது சௌபாக்கியத் திட்டமாக இருக்கலாம். ஆனால், முழு நாட்டுக்கும் இது மோசமான திட்டம் - என்றார். (எ-இ)

## அரசாங்கக் கணக்குகள் குழுவுக்கு 100 வயது

கொழும்பு, ஒக்.18

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு உருவாக்கப்பட்டு நேற்றுடன் 100 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன.

இலங்கை நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட முதலாவது நிதிக் கண்காணிப்புக் குழுவாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு கருதப்படுகின்றது.

ஐ.ஆர்.தம்பிமுத்துவால் சட்ட பேரவையில் 1921ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முன்வைத்த பிரேரணைக்கு அமைய அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அமைக்கப்பட்டது. (எ-இ)

**நாளை** 19.10.2023 வியாழக்கிழமை ஐப்பசி 02

சுபநேரம் : 07.32 - 09.02

ராகுகாலம் : 01.32 - 03.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென்னாபிரிக்காவுக்கு நெதர்லாந்து 'பளார்!'

## எமனான மண்ணின் மைந்தன்

புதுடில்லி, ஒக். 18

**உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் நெதர்லாந்து அணியிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தது தென்னாபிரிக்கா.**

தென்னாபிரிக்கா அணிக்காக முன்னொரு காலத்தில் விளையாடி, பின்னர் நெதர்லாந்துக்குச் சென்று அந்த நாட்டுத் தேசிய அணியில் இடம்பிடித்து விளையாடிவரும் வான் டெர் மேர்வ், தென்னாபிரிக்காவின் முக்கியமான விக்கெட்களை வீழ்த்தி தென்னாபிரிக்க அணியின் தோல்விக்குக் காரணமாக இருந்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணிக்கு முன்னணி வீரர்கள் தடுமாற்றத்தையே பரிசாக வழங்கினார்கள். விக்ரம்ஜித் சிங் 2, மக்ஸ் ஓ டொட் 18, பஸ் டி லீட் 2 என அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். ஒரு கட்டத்தில் நெதர்லாந்து அணி 50 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்தது. ஸ்கொட் எட்வாட்ஸ் மத்திய வரிசையில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியை மீட்டெடுத்தார். அவர் 69 பந்துகளில் 78 ஓட்டங்களைக் குவித்தார். பின்வரிசையில் வான் டெர் மேர்வ் 29 ஓட்டங்களையும், ஆர்ஜன் தத் 23 ஓட்டங்களையும் விளாச 43 ஓவர்களில் (மழையால் ஓவர்கள் குறைக்கப்பட்டன) 8 விக்கெட்டுகளை இழந்து 245 ஓட்டங்களை நெதர்லாந்து பெற்றது.

பந்துவீச்சில் இங்கிடி, ஜான்சன், ரபாடா மூவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து நேற்றும் தடுமாற்றத்தைக் காட்டினார் பவுமா. வான் டெர் டசன், எய்டன் மார்க்ரம் இருவரும் முறையே 4, 1 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி சரிவை நோக்கி நடைபோட ஆரம்பித்தது. குயின்டன் டி ஹொக் 20 ஓட்டங்களுடனும், கிளாசன் 28 ஓட்டங்களுடனும் பவிலியன் திரும்ப நெதர்லாந்தின் பக்கம் வெற்றிக்காற்று வீச ஆரம்பித்தது. இறுதி நம்பிக்கையாக நின்ற மில்லரை 43 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் வான் பீக். முடிவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றது தென்னாபிரிக்கா. 38 ஓட்டங்களால் வென்றது நெதர்லாந்து. (ம)



## உதயனின் பரிசுக்குவியல்

தினம் ஒரு பரிசு 14

நியூஸிலாந்து- ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான இன்றைய (18.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ..............................................

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................
தே.அ.இல : ..............................................
தொ.இலக்கம் : ..............................................

மெகா பரிசு

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ..............................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................
தே.அ.இல : ..............................................
தொ.இலக்கம் : ..............................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக (தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

### இன்றைய ஆட்டம்

நியூஸிலாந்து — ஆப்கானிஸ்தான்

இடம் : சென்னை
நேரம்: பி.ப. 2.00

NEW ZEALAND CRICKET



# கோலியை விடவும் ரோகித் திறமைசாலி

## பொண்டிங் புகழாரம்

புதுடில்லி, ஒக். 18

கோலியை விடவும் ரோகித் சர்மா மிகவும் திறமையான தலைவர் என்று அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் பொண்டிங் புகழாரம் சூட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் தொடரில் இந்திய அணியின் ஆட்டம் மிகவும் நேர்த்தியாக உள்ளது என்றால், அதற்கு இந்திய அணியின் தலைவர் ரோகித்தின் மிகச்சிறந்த தலைமைத்துவமும் ஒரு காரணம். அணிக்குள் தேவையற்ற அழுத்தங்கள் வருதை அவர் விரும்பவில்லை. அழுத்தங்களை அனுமதிக்காமல் அவற்றை மிக அழகாகவும் அமைதியாகவும் கையாள்கின்றார். முன்னாள் தலைவர் கோலியை விடவும் வலிமையான தலைவராக ரோகித் உள்ளார் என்றார். (ம)

### தினம் ஒரு பரிசு நாள் 12 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| கி.யனுசன் | - வட்டக்கச்சி | சு.சுதாகரன் | - நாவாந்துறை |
| சு.நிஷாந்த் | - கொடிகாமம் | ப.ஷாமினி | - அல்லைப்பிட்டி |
| சி.வைகுந்தன் | - திருநெல்வேலி | த.தர்மிகன் | - ஏழாலை |
| தி.மதுராகரன் | - சித்தன்கேணி | வை.கௌசிகன் | - நானாட்டான் |
| கோ.சஸ்விகன் | - வரணி | தெ.ஏப்ரியோன் | - மடு |
| எஸ்.சிவறூபன் | - மானிப்பாய் | எஸ்.கவிப்பிரியன் | - வட்டக்கச்சி |
| த.ரக்ஷனா | - மீசாலை | சி.அலெக்ஸ் | - இணுவில் |
| மா.இந்து | - ஊரெழு | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.ந.கடம்பேசுவரன்
பண்டிதர்
காப்பியநாதன்

## புதன் பொய்கை

"பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு." - வள்ளுவர்



# தமிழ்மொழியில் ஒற்றெழுத்து உண்டாக்கும் பொருள்நயம்

நம் மொழியாம் தமிழில் வேண்டாத ஒற்றெழுத்தைச் சேர்ப்பதுவும் வேண்டிய இடத்திலே ஒற்று மிகுதலைத் தவிர்ப்பதுவும் சொற்பொருளின்ப நயத்தினைத் தராது கேட்டினை உண்டாக்கும். சொல்லும் சொல்லும் சேர்ந்தே உணர்ச்சியினை தருகிறது. அவ்வாறு சேருகின்றபோது சில இடங்களில் ஒற்று வேண்டியுள்ளது. வேறு சில இடங்களில் ஒற்று வந்து மிகுவதில்லை. எவ்விடத்தில் ஒற்று வருதல் வேண்டும், எவ்விடத்தில் அது வரவேண்டுவதில்லை என்பதைக் கருத்தில் இருத்திக்கொள்ளலே மொழிக்கான விருத்தியாகும். சில இடங்களிலே வல்லெழுத்தன்றி, மெல்லொற்று மிகும். எங்கே ஒற்று மிகும் எங்கே மிகாது என்பதற்கான விதிகள் உள - விலக்குகளும் உள்ளன. சந்தேகமும் ஐயமும் ஏற்படும் இடங்களிலே விதியும் விலக்கும் வழிகாட்டுவதை நாம் உணரலாம். என்றாலுங்கூட, பெரும்பாலும் மொழியை பயன் செய்வோருக்கு வழிகாட்டுவது **அவரவர் காதுகளும் நாவும் பண்பட்ட தமிழ் மரபுமேயாகும்.**
அந்த நயமே சுவையாக மலரும்.

**'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்'**

என்பதனாலறிக.
பிறமொழி வாஞ்சையும் பற்றும் மேவி நிற்பதால் தமிழ்மொழியில் பற்று குன்றிப்போய் தமிழ் மரபுகளை மறந்தவரான - மரபைப் பேணமுடியாத இந்தக்கால இளம் எழுத்தாளர் மரபைபயறியாத போக்கினால், மரபுப் பிழைகளை மறைக்கத் தமிழிலே ஒற்று மிகுதவும் மிகாமல் வருதலும் ஏதோ இலக்கணப் புலவர்களின் செயலென எண்ணி ஒற்றெழுத்தை தவிர்த்து வருகின்றார்கள். இலக்கணம் தனிப்படைப்பல்ல. செயற்கையான சட்டங்களும் அதற்கில்லை. அவையெல்லாம் மொழி தோற்றம் பெற்ற காலத்திலிருந்து தொடர்ந்து வரும் மொழிப் பண்பு. அவை ஏடுகளினால் மட்டும் வளர்ந்ததன்று. செவிவாயிலாகப் புலன்களிலே செறிந்து நாவினும் கருத்தினும் எண்ணங்களினாலும் மரபாகின. அவை பொருளற்றவையல்ல. ஒலி வேறுபாடு, கருத்து வேறுபாடு எல்லாம் அதற்கு உண்டு.
'வாழை பழம்' கொண்டுவா, 'கார் ஓட்டி' சென்றான் என்ற பல உதாரணங்களால் ஒற்றெழுத்தின் இயல்பை உணர்ந்துகொள்ள முடியும். இவற்றில் வாழை பழம் ஆகிய இரு சொற்களும் இரு பொருளைக் குறிப்பவை. இதேபோல காரோட்டி என்பதில் ஓட்டுபவனான சாரதியைக் குறிக்கும் காரணப்பெயராகும். இவ்வாறெல்லாம் 'சொல்' தொகையாலும் 'பொருள்' தொகையாலும் வேறுபடுபவவை. இரு சொற்களின் நடுவே (சந்திப்பில்) ஒற்று மிகுந்து வருதலால் பொருள் வேறுபாடும் ஒலி வேறுபாடும் ஏற்படுதல் இயல்பு. வாழைப்பழம் ஒரு தொகைச் சொல். ஒற்றெழுத்தான '**ப்**' வராவிட்டால் வாழை பழம் என இருசொல்லாகி விடும். இரண்டு எழுத்துக்களின் இணைப்பில் பொருள் வேறுபாட்டுக்கு ஒற்று மிகுவதன் காரணம் என்று மட்டும் கூறமுடியாது. இந்தவிடயங்களிலே பெரும்பாலும் **க,ச,த,ப,** என்னும் வல்லொற்று வருதல் காணலாம்.
மேலும் மென்தொடர்க் குற்றுகரத்தின் பின்வந்து ஒற்றுச்சேரும் இடங்களுமுண்டு. எனவே ஒற்று மிகுதலும் மிகாமையும் தமிழின மரபு. அது வெறும் எழுத்து மரபன்று. ஒலி மரபாகும். தொல்காப்பியம் நன்னூல் முதலாம் இலக்கண நூல்கள் கூறும் பிறப்பியல் ஒலி நுட்பங் கூறும் - பிறப்பு முறையும் கூறும். தன்வினைப் பகுதிகளில் கூறு, ஆறு என்பவை பிறவினையாகும் போது கூற்று, ஆற்று எனச் சொல்லின் உள்ளேயே வலி(வல்லெழுத்து) மிகுதல் காணலாம். இனவெழுத்து, பகையெழுத்து இன்ன எழுத்துக்குப்பின் இன்னவெழுத்து வரவேண்டும் என்றெல்லாம் மொழியிலக்கணம் பேசும் அவ்வாறெல்லாம் காண்கையில்.

<u>நீங்கு</u> - நீக்கு; <u>தேங்கு</u> - தேக்கு

முதலிய வினைகளிலே மென்மை வன்மையாதல் காணலாம்.

<u>அழி</u>.........அழிந்தது.........அழித்தது
<u>நிறை</u>.........நிறைந்தது.........நிறைத்தது

முதலியவற்றின் தன்வினைப் பகுதியும் பறிவினைப் பகுதியும் முற்று அழிந்தது - அழித்தது; நிறைந்தது - நிறைத்தது என வருதல் காணலாம்.

ஆகவே, அழிந்தது நிறைந்தது என்று '**த**' என்ற வன்மை '**ந்**' என்ற மென்மையானதும் காணலாம் இவ்வாறெல்லாம் பார்க்கையில் மிகுதலாவது சொற்களின் மீது உள்ள அழுத்தத்தைப் பொறுத்தது. பெரும்பாலும் உயிரெழுத்துக்கள் அழுத்தம் பெற்று வரும். அழுத்தத்தைப் பொறுத்தே **வி, பி,** என்ற பிறவினை விகுதி சேர்க்கப்பெறும் இடங்களிலும் இவ்வழுத்தம் பெறுவதால் '**பி**' விகுதி வந்து ஒற்று மிகுவதால் அழுத்தம் பெறாத இடத்தில் '**வி**' மட்டுமே வருவதும் அழுத்தம் பெறும் இடங்களில் '**ப**' கரம் வந்து இரட்டுவதும் காண்க. அழி<u>ப்பி</u>, நிறை<u>ப்பி</u> இவ்வாறு வரும் இரட்டித்த மெய்கள் தமிழினம் விலக்க முடியாத மொழியின் ஓர் உயிர் நிலையாகும்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு நம்மக்கள் மத்தியில் வழக்காறாகக்கண்ட சொற்களை ஆராயலாம்.

எழுத்து.......எழுத்துகள்.......எழுத்துக்கள்
வாழ்த்து........வாழ்த்துகள்.......வாழ்த்துக்கள்

'**கள்**' விகுதி பெருவாழ்வு பெற்றால் இவ்விளக்கம் வேண்டியுள்ளது. பத்து விலங்கு 'எண் பத்து' என அமைவதால் விலங்குகள் என்பதில் '**கள்**' வேண்டியதில்லை. பத்து விலங்கு என வருவது சிறப்பு இவ்வாறே எழுத்து என்பதோடு '**கள்**' சேர வந்த உதாரணத்தைப் பார்த்தீர்கள். இங்கே அழுத்தம் கொடுத்தால் இரட்டித்த மெய்கள் வருவதையும் அதன் சிறப்பையும் உணரலாம்.

வகுப்பு.........வகுப்புகள்........வகுப்புக்கள்

தற்பொழுது வகுப்புகள் எனச் சிலர் எழுதி வருகின்றனர். இலக்கணம் காண்கின்றனர். அது ஒருகால் சரியென வாதிட்டாலுங்கூட ஒற்று இரட்டிப்பதால் என்ற இயற்கையை விடமுடியாது. தமிழ் இலக்கணம் இயற்கையானது சொல்வழக்காற்றில் சொல்லுக்குரிய இழுமென் ஓசையானது சிறப்புடையது. சொற்களை அழுத்திக் கூறுவதும் மென்மையாகக் கூறுவதாலுமே சொற்பொருள் சிறக்கின்றது. எடுத்தல், படுத்தல், நலித்தல், இவற்றில் நாவும் செவியும் கருத்தும் பிறப்பும் கலந்தே நிற்கின்றன. எல்லாவற்றுக்கும் இழுமென்னோசை அடிப்படையானது. அதனைக் கொச்சைப்படுத்தக்கூடாது.

மேலும், வகுப்புகள், வாழ்த்துகள் என்கின்றபோது சொல்லானது விட்டிசைக்கின்றது. இழுமென்னோசை கெடுகின்றது. வகுப்புக்கள், வாழ்த்துக்கள் என்கின்ற போது ஒற்று இரட்டித்து ஓசைச்சிறப்பு உண்டாகிறது. சொல் அழுத்தம் பெறுகிறது. பக்கிசைத்தல், விட்டிசைத்தல் என்ற சிக்கல் இல்லாது இதன் மூலம் ஒரு சொன்னீர்மைப்பட்டு ஓசைச் சிறப்படைந்து ஓசை வளமுடைய நம்மொழியினது செம்மையைக் காத்து வரும் முறைமையை உணரலாம். மேலும் திருமண அழைப்பிதழ்களில் திருநிறைச்செல்வன், திருநிறைச்செல்வி என எழுதுதல் வேண்டும். திருநிறைந்த, திருநிறைகின்ற, திருநிறையும் என முக்காலத்துக்கும் உரிய வினைத் தொகையாக எழுதுதல் வேண்டும். பூப்புனித எனவும் எழுதுகின்றனர். இது பிழையானது. பூப்புப்புனித என எழுதுதல் வேண்டும். பூப்பு என்ற மங்கலச்சொல் முழுமையாக அமைதல் வேண்டும். ஆக ஒற்றெழுத்து மிகுதல் மிகாமல் வருதல் ஆகியவற்றை இடமறிந்து ஆட்சிப்படுத்தி, ஒற்றெழுத்தின் சிறப்பைக் காத்து அந்நலம் - நயம் யாவும், அண்மைநிலை அவாய்நிலை தகுதிநிலை ஆதியாம் கட்டுரை வன்மைக்கும் ஏற்றாற்போல பயன்செய்து மொழியின் ஓசை நலத்தைக் காத்தும் அதன் சிறப்பைக் கண்டும் மகிழ்வோமாக!

"இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன்
கசதப மிகும் மன்னே'
என்று காணும் நன்னூல்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உளநலம்

## மனிதகுலத்தின் ஒப்பற்ற செல்வம்

கலாநிதி க.கஜவிந்தன்
சாந்திகம்
உளவளத்துணை நிலையம்
யாழ்ப்பாணம்

உளநலம் என்பது உச்சமாகச் சவாலுக்குட்பட்டுவரும் இன்றைய நாள்களில், உளநலம் பற்றிய அறிவை மக்கள் மேம்படுத்துவதற்கும் அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் பல்வகைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது தவிர்க்கப்பட முடியாததாகும். இந்த வகையில் உலகளாவிய மனித உரிமையாக அனைவரின் உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கும் உள ஆராக்கியத்தைப் பாதுகாக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும், 'அனைவருக்கும் உளநலம் ஓர் உலகளாவிய மனித உரிமை' என்ற கருப்பொருளின் அடிப்படையில் சர்வதேச உளநலத்தினம் இந்த வருடம் கடந்த 10ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்டது.

உளநலம் அனைத்து மக்களுக்கும் அடிப்படை மனித உரிமை. ஒவ்வொருவரும், யாராக இருந்தாலும், எங்கிருந்தாலும், உளநலத்தின் மிக உயர்ந்த தரத்தை அடைய உரிமை உண்டு. ஆயினும்கூட, உலகளவில் எட்டுப் பேரில் ஒருவர் உளப்பிரச்சினைகளோடு வாழ்கிறார்கள். இது அவர்களின் உடல் ஆரோக்கியம், அவர்களின் நலவாழ்வு, அவர்கள் மற்றவர்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறார்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரங்களைப் பொறுத்துக் காணப்படும். ஒரு நபரின் உரிமைகளைப் பறிப்பதற்கு அல்லது அவர்களின் சொந்த உடல்நலம் குறித்த முடிவுகளில் இருந்து அவர்களை விலக்குவதற்கு உளநிலை ஒரு காரணமாக இருக்கக்கூடாது. ஆயினும்கூட, உலகம் முழுவதும், உளநலப் பிரச்சினைகள் உள்ளவர்கள் பரந்த அளவிலான மனித உரிமை மீறல்களை தொடர்ந்து அனுபவித்து வருகின்றனர். பலர் சமூக வாழ்க்கையிலிருந்து விலக்கப்பட்டு, பாகுபாடு காட்டப்படுகிறார்கள். உள ஆரோக்கியம் மதிப்பிடுவதையும், மேம்படுத்தப்படுவதையும், பாதுகாக்கப்படுவதையும் உறுதிசெய்ய ஒவ்வொருவரும் தங்களின் மனித உரிமைகளைப் பயன்படுத்தவேண்டும். உளநலம் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர். ஆண்டுதோறும் உலகம் முழுவதும் 8 இலட்சம் பேர் தவறான முடிவெடுத்து உயிர் மாய்க்கின்றனர். இவர்களில் 15 முதல் 44 வயதுக்குட்பட்டோரே அதிகம் என புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன.

### உளநலம்

நாம் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளால் ஏற்படும் மன அழுத்தங்களுக்கு நாம் மனநிறைவுடன் பொருத்தப்பாடு மேற்கொள்ளும் திறமையே உளநலம் என்று வரையறை செய்துள்ளனர்.

'உளநலவியல்' என்பது பொருத்தப்பாடு, நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக நாம் மேற்கொள்ளும் வழிமுறையாகும். தன்னுடன் ஒத்திசைவையும், சமூக நல்லிணக்கத்தையும் உருவாக்கும் ஒருவரின் திறமை உளநலமாகும். இலங்கையில் மக்கள் தொகைக்கு ஏற்ப, உள ஆற்றுப்படுத்துனர்களின் எண்ணிக்கை இல்லை. சில ஆற்றுப்படுத்தல் வளவாளரிடம் ஆற்றுப்படுத்தலுக்குத் தேவையான அடிப்படைத் தகுதி இல்லாத காரணத்தால், அவர்களின் செயற்பாடுகள் உளநலம் பாதித்தவர்களை குணமாக்குவதற்குப் பதிலாக மனப்பாதிப்பை அதிகரிக்கச் செய்துவிடுகிறது.

### உலகளாவிய பிரச்சினை

மனிதருடைய உளநலமும் காலத்துக்குக் காலம் மாறுபடுகிறது. பெரும்பான்மையானோருக்கு உளப்பாதிப்பு சிறிது நேரம் வந்துபோகும். ஆனால் சிலருக்கோ இந்த அனுபவம் மிகவும் வித்தியாசமானதாய் அமைந்துவிடுகிறது.

உளநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அப்பாதிப்பின் தீவிரத் தன்மையைப் பொறுத்து பலவிதமான அறிகுறிகள் ஏற்படும். உதாரணமாக, கவலை என்பது தற்காலிகமான சாதாரணமான ஒரு துன்ப உணர்வாகவும் வரலாம் அல்லது வாழ்க்கை முழுவதையுமே பாதிக்கின்ற பெருந்துயரமாகவும் வரலாம். உலகில் மன நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஆனால் இவர்களுக்கு சிகிச்சை அளிக்கப் போதிய வசதிகள் இல்லை என்பது வேதனைக்குரியது.

உளநலன் பாதிப்பில் ஆண்களும், பெண்களும் சமமாகவே உள்ளனர். அதே நேரத்தில் மன அழுத்தத்தில் ஆண்களை விட பெண்களே அதிகம் பாதிக்கப்படுவதாக புள்ளி விவரம் தெரிவிக்கிறது. தற்கொலை எண்ணங்கள், நோய்கள் போன்றவற்றுக்கு மன அழுத்தம் காரணமாகிறது. மன அழுத்தத்தால் ஆண்களைவிட பெண்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டாலும் நம் சமுதாயத்தில் பெண்களைவிட ஆண்களே அதிகமாக உயிரை மாய்க்கின்றனர் என்று புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன. உலக மக்கள் தொகையில் 60 இலட்சம் குழந்தைகள் மனநோயால் பாதிக்கப்பட்டு இருப்பதாக ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. தற்போது உலக மக்கள் தொகையில் 35 கோடி பேர் மனஅழுத்தத்துக்கு ஆளாகியுள்ளனர். உலகளாவிய ரீதியில் ஆண்டு தோறும் மன அழுத்தத்தால் 10 இலட்சம் பேர் தவறான முடிவெடுத்து இறக்கின்றனர். இந்த எண்ணிக்கைக்கு 20 மடங்கு அதிகமாக தற்கொலை முயற்சிகளும் நடக்கின்றன. அவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள் அல்லது அவர்களது முயற்சி தோல்வி அடைகிறது.

### உளநோய் தொடர்பான பொதுவான புரிதல்கள்

மனநோய் என்பது மனிதருக்கு வரக்கூடிய ஒரு பொதுவான பிரச்சினை. ஏதாவது ஒரு வகையிலான மனநோய் நான்கு பேரில் ஒருவர் என்ற அளவில் வரவே செய்கிறது.

மனநோய் யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். மனச்சிதைவு நோய் ஏறத்தாழ நூற்றில் ஒருவருக்கு அவரது வாழ்நாளில் ஏதாவது ஒருகட்டத்தில் வருவதாகத் தெரியவருகிறது.

மனநோய் வந்தவர்களால் அதிலிருந்து முழுமையாகக் குணமடையவும் அர்த்தமுள்ள வாழ்க்கையை அவர்களால் திரும்ப வாழவும் முடியும். ஒருவருக்கு மனநோய் இருந்தாலும், அது பலகாலம் வெளியில் தெரியாமலே இருக்கும். மனநோய்களை ஒன்றை ஏனையவற்றிலிருந்து தெளிவாகப் பிரித்துப் பார்ப்பதென்பது அனைத்து நேரத்திலும் சாத்தியமாகாது. அதேபோல மனநோய் வந்தவர்களுக்கு மருத்துவரீதியில் என்ன நோய் வந்திருக்கிறது என்று தெளிவாகவும் மாற்றமில்லாமலும் கூறுவதும் சிரமம். ஆகவேதான் தீவிர மனநோய் குறித்து மருத்துவ ரீதியில் தெளிவான மாதிரிகளை உருவாக்குவது என்பது ஓரளவுக்கே சாத்தியம். தமக்கு வந்துள்ள மனநோய்க்கான மருத்துவப் பெயர் தெரியவரும் வரையில், தாம் அனுபவிக்கும் கஷ்டங்கள் தொடர்பில் உதவியையும் ஆதரவையும் நாடுவதற்கு ஒருவர் காத்திருக்கக்கூடாது.

**மனநோய்க்கான அறிகுறிகள்**

* குழப்பமான, உண்மைக்குப் புறம்பான சிந்தனை
* தனக்குத்தானே பேசிக்கொள்ளுதல்,
* காரணம் ஏதுமில்லாது சிரிப்பது, அழுவது.
* தொடர்ந்து நெடுநேரம் கவலையாக, சிடுசிடுப்புடன் இருத்தல்.
* அளவுக்கு அதிகமாகவோ, குறைந்தோ உணர்ச்சியுறுதல்
* அளவுக்கதிகமான அச்சம், கவலை, ஏக்கம்
* சமூகப் பின்னடைவு விலகிநடத்தல்
* உண்ணுதல், உறங்குதல் வழக்கங்களில் பெரும் மாற்றம்
* பெரும் கோபம்
* மாயக்காட்சிகள்
* தினசரி செயல்களில் சரிவர ஈடுபடமுடியாமை
* தற்கொலை எண்ணம் ஏற்படுதல்
* அளவுகடந்த கவலையும், குற்றஉணர்வும்

மனநோய்கள் ஏற்படுவதற்கான ஆபத்து சிலருக்கு பிறவியிலேயே அதிகம். தங்களது பரம்பரையில் மனநோயோடு இருந்தவர்களுடைய சில மரபணுக்கள் இவர்களுக்கும் வந்துவிடுவது இதன் காரணமாக இருக்கலாம். ஆனால் ஒருவருக்கு தீவிர மனநோய் இருக்கிறது என்பதாலேயே அவரது குடும்பத்தில் அல்லது பரம்பரையில் மற்றவருக்கும் மனநோய் வரும் என்று அர்த்தமாகாது. அப்படி வருவதற்கான சாத்தியக்கூறு இருக்கலாம். உறவுகள் முறிந்துபோவது, இறந்துபோகும் நிலை உருவாவது, நஷ்டமடைந்து ஏழ்மையில் தள்ளப்படுவது போன்ற கஷ்டமான சூழ்நிலை ஒருவர் வாழ்வில் ஏற்படும்போது அவருக்கு தீவிர மனநோய் ஆரம்பமாகலாம். சில போதை மருந்துகளைப் பயன்படுத்துவதாலும் தீவிர மனநோய்கள் ஏற்படுகின்றன. அதிலும் குறிப்பாக இளம் வயதினருக்கு இந்தப்பாதிப்புகள் அதிகம் வருகின்றன.

### உளநலத்தை நிர்ணயிக்கும் காரணிகள்

**• மரபுநிலைக் காரணிகள்**

ஒருவரின் உளநலம் மரபுநிலையின் நிபந்தனைகளால் வரையறுக்கப்படுகிறது. ஒருவரது தோற்றம், வளர்ச்சி, நுண்ணறிவு போன்றவற்றுக்கான ஆற்றலை நாம் மரபுவழியாகப் பெறுகின்றோம். இந்த ஆற்றலின் வளர்ச்சியையும், நடத்தையையும் அதிகம் மரபுகளே தீர்மானிக்கின்றன.

**• உடல் சார்ந்த காரணிகள்**

பிறரை வெல்லக்கூடிய உடல்வாகு, முகச்சாயல் போன்ற சில பண்புகள் சமூக ஏற்பினைப் பெறுவதால், அந்தப் பண்புகளைக் கொண்டிருப்போர் உளநலம் உள்ளவராய் இருக்கின்றனர். மிகுதியான வேலை அல்லது ஓய்வின்மை சோர்வை அளிப்பதால், அது உளநலத்தைப் பாதிக்கிறது. உடல் வலிமையின்மையும், குறைபாடுகளும், சில நோய்களும் ஒத்திசைவுடன் நடந்து கொள்ளும் தன்மையைப் பாதிக்கின்றன.

**• சமூகக் காரணிகள்**

உளநலத்தைப் பாதுகாப்பது அல்லது பாதிப்பதில் வீடு, பாடசாலை, சமுதாயம், போன்ற சமூகக்குழுக்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. ஒருவர் தனது அறிவு, திறமைகள், நாட்டங்கள், மனப்போக்குகள், பழக்கங்கள், மதிப்பீடுகள் போன்றவற்றை வளர்த்துக் கொள்ளவும், குறிக்கோள்களை அடையவும், சமூகக் காரணிகள் பெரிதும் உதவி புரிகின்றன.

### தடுப்பதற்கான வழிகள்

உளநோய்களைத் தடுப்பது அவசியமாகும். உளநோய்களைத் தடுப்பதில் மூன்று தடுப்பு முறைகளை நாம் கையாளலாம்.

**1. உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல்**

உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல் திட்டமிட்ட குடும்பத்தில் தொடங்கி, குழந்தை பிறப்பதற்கு முன்னரும், குழந்தை பிறந்த பின்னரும் கடைப்பிடிக்கவேண்டிய பாதுகாப்பு முறைகள் அனைத்தும் அடங்கியதாகும். இங்கு திட்டமிட்ட குடும்பத்தின் முக்கியத்துவம் அறிவுறுத்தப்படுகிறது. அதாவது குடும்பம் எத்தனை குழந்தைகளைப் பெற்றிருக்கவேண்டும், குடும்பச்சூழல், திருமணநிலை இவற்றைக் கவனத்திற்கொண்டு எப்பொழுது குழந்தை பெறலாம், மேலும் குழந்தை அவசியம்தானா என்பனவற்றைச் சிந்தித்தல் வேண்டும். இந்த முறையில் மரபுநிலை பற்றிய அறிவுரைபகர்தலும் பெறுதலும் அடங்கும். மரபுநிலை சார்ந்த அறிவுரையில் பெற்றோருக்குப் பல புதியவகைச் சோதனைகள் செய்து அவர்கள் உடல் ஊனம் அல்லது நிறை குறைபாடு உள்ள குழந்தைகள் பெறச் சாத்தியக்கூறு உள்ளதா என சோதித்து அறியவேண்டும்.

**2. உளச் சமூகச் சார்புடைய பாதுகாப்பு முறைகள்**

உளச்சமூகச் சார்புடைய பாதுகாப்பு முறைகளில் வாழ்வின் உண்மைநிலை, நடைமுறைச் சாத்தியக்கூறுகள், மதிப்பீடுகள் போன்றவற்றைப்பற்றி நாம் சரியான கருத்துகளைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. ஒருவன் தன்னைப்பற்றியும் உலகத்தைப் பற்றியும் தவறான கருத்துகள் கொண்டிருந்தால் அவருடைய பொருத்தப்பாடும் தவறானதாக இருக்கும். அதுபோன்றே அர்த்தமுள்ள, மன நிறைவான வாழ்க்கை அமையும் வண்ணம் சிறந்த சமூக மதிப்பீடுகளைப் பெற இயலாதவர் தவறான பொருத்தப்பாடுகளையும், உளப்பிரச்சினைகளையும் எதிர்கொள்வார்.

**3. சமூகப் பண்பாடு சார்ந்த பாதுகாப்பு முறைகள்**

பொதுமக்களுக்குக் கல்வி புகட்டுதல் மற்றும் சமூகப் பாதுகாப்பு அளித்தல் முதலாக, பொருளாதாரத் திட்டம் வகுத்தல், சமூக சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் வரையிலான பரந்த விரிவான சமூகபாதுகாப்பு வழிமுறைகள் எல்லா மக்களுக்கும் போதிய உளநலம் பேணும் வழிமுறைகளையும், விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்துதல் வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை மனநோயாளர் எண்ணிக்கையளவுக்கு தகுந்த உள மருத்துவர்கள், உள ஆற்றுப்படுத்துநர்கள் இல்லை.

மேலும் மனநலம் தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் இல்லை அத்துடன் உடல் நலத்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் மன நலத்தைப் பாதுகாப்பதற்கு மக்கள் கொடுப்பதில்லை.

இன்றும் மக்கள் மத்தியில் மனநோய் தொடர்பாக எதிர்மறை எண்ணங்களே இழையோடிக் காணப்படுகின்றன. முதலில் மக்கள் மத்தியில் மன நலத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க இலக்கியங்களில் வணிகமும் வணிக நடைமுறைகளும்

(சங்க காலத்தில் வணிக நடைமுறைகள் எவ்வாறிருந்தன. அக்காலத்தில் தமிழர்கள் எவ்வாறான வணிகக் கலாசாரத்தைப் பின்பற்றினார்கள் என்பன தொடர்பில் இந்தக் கட்டுரை விரிவாக ஆராய்ந்து எண்பிக்கின்றது. கடந்த வாரத்தின் தொடர்ச்சி இவ்வாரம் பதிவாகின்றது)



■ பேராசிரியர்
சிவேசன் சிவானந்த மூர்த்தி
சந்தைப்படுத்தல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தமிழர்களுடன் வணிகத்தில்: ஈடுபட்ட கிரேக்க உரோமர்கள் மற்றும் அரேபியர்கள் யவனர் என அழைக்கப்பட்டனர். அவர்கள் துறைமுக நகரங்களில் தங்கி தமது வாணிப நடவடிக்கையில் ஈடுபட்டனர் எனவும் அவர்கள் தங்குவதற்கு என யவனர் இருக்கைகள் இருந்தன எனவும் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. யவனர்கள் பொன்கொடுத்து மிளகினைக் கொள்வனவு செய்தார்கள் என அகநானூறு செய்யுளீள் தகவல் ஒன்றினைத் தருகின்றது.

யவனர் தந்த வினை மாற்ற நன்கலம்
பொன்னொடு வந்து கறியோடு பெயரும்
(அகம்: 149: 910)

நவீன உலகில் வளர்ச்சியடைந்த நாடுகள் கடைப்பிடிக்கின்ற இரு நகரக் கொள்கையானது ஆதித்தமிழனால் இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கடைப்பிடிக்கப்பட்டது. உதாரணமாக மதுரையின் அரசியல் தலைநகர் கொற்கை, துறைமுக நகர்களாக உறையூர், பூம்புகார் என்பன அமைந்திருந்தன.

மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
(பட: 216218)

என்ற பாடல் வாயிலாக பூம்புகார் நகரில் வாழ்ந்த மக்கள் வியாபாரத்தின் நோக்கத்துக்காக வெளித்தேசத்தில் இருந்து வருகை தந்த மக்களுடன் சகஜமாகப் பழகினார் என்பது புலப்படுகின்றது.
மேலும் கடற்கரை ஓரத்தில் கப்பல்கள், ஓடங்கள் மரக்கலங்கள் திசைமாறி பயணம் செய்யாது இருக்க வழிகாட்டும் வகையில் நடுக்கடலில் வருகின்றபோதே கடலின் கரையினை அடையாளம் கண்டுகொள்ள துறைமுகத்தில் கலங்கரை விளக்கு நீர்ப்பாய் துறையில் அமைக்கப்பட்டிருந்தது. இதனை பெரும்பாணாற்றுப் படையில் மிக அழகாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்று அரஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவில் மாட்டிய இலங்குசுடர் நெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்
துறைபிறக்கு ஒழியப் போகிக் கறைஅடிக்
(பட: 346 351)

நீர்பாய்த்துறை பட்டினத்தில் அமைந்துள்ள துறைமுகத்தில் காணப்படுகின்ற திசைவிளக்கின் உயரம் வானம் விழாத படி முட்டுக்காலாக ஊன்றி வைத்த ஒரு பற்றுக்கோள் போல விண்ணை முட்டும் வரை உயர்ந்துள்ளது என வர்ணிக்கப்படுகின்றது. இலங்கை - இந்தியா நோக்கி பயணித்த காலனித்துவ வாதிகள் கடல் வணிகத்தில் திசை அறிந்து கொள்ள தமது காலனித்துவத்திற்குட்பட்ட இடங்களில் எல்லாம் கலங்கரை விளக்கினை அமைத்தனர். ஆனால் தமிழ்ச் சமூகமோ இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இவ்வாறு அடிப்படை கட்டுமான வசதியுடன் கூடிய வியாபாரத்தில் ஈடுபட்டனர். பண்டைத் தமிழனின் வியாபார நடவடிக்கையின் முக்கியமான அமைவிடமாக விளங்குகின்ற கடைத் தெருக்கள், கடைகள் பண்டை தமிழ் இலக்கியங்களில் அழகாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை போன்றவற்றில் மிக அழகான முறையில் கடைத்தெருக்கள் சிறப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வேளை பண்டைத் தமிழனின் ஆளிடைக் காதலினை கூறும் அகநானூறு இவ் அரிய செய்தியைப்பதிவு செய்யத் தவறவில்லை.

வாடா வேம்பின் வழுதி கூடல்
நாள் அங்காடி நாலும் நறுநுத்
(அகம் 93: 910)


இப்பாடல் வரியில் தலைவன் ஒருவன் தலைவியின் கூந்தலின் அழகை பாண்டிய மன்னனின் ஆட்சிக்குட்பட்ட மதுரையில் அமைந்த பகல் நேரக் கடைகளில் இருந்து வருகின்ற வாசனையுடன் ஒப்பிடுகின்றார். இவ்வாறு கூந்தலின் நறுமணத்தை கடைத்தெருக்களிலிருந்து வருகின்ற சுகந்தத்துடன் ஒப்பிடுவதில் இருந்து கடைத் தெருக்கள் எவ்வாறு முறையான வழியில் அமைக்கப்பட்டிருந்தன என்பது தெரியவருகின்றது. மேலும் அகநானூற்றில் ஒரு பாடலில் தலைவன் வரவுக்காக காத்திருக்கும் தலைவி தோழிக்கு தலைவரின் சிறப்பை விளம்பும்போது.

விழவின் நாயினும் துஞ்சா ததாகும்
மல்லல் ஆவணம் மலுகுடன் மடியின் (அகம்)

விழாக்கள் ஏதும் இல்லாதபோதும் வளமாக இயங்கிக் கொண்டிருக்கின்ற கடைத் தெருக்கள் போன்று தனது தலைவனும் இயங்கிக் கொண்டிருக்கின்றான் என்கிறாள். இச்செய்யுள் வரிகளில் இருந்து மதுரை வீதிகளில் அமைந்த கடைகள் ஓய்வின்றிச் செயற்படுவது புலப்படுகின்றது. மேலும் மதுரைக்காஞ்சியில் மதுரை நகரில் காணப்பட்ட அங்காடிகள் அல்லங்காடி, நாளங்காடி என்கின்ற இரு வகையான சந்தை கட்டமைப்புக்குள் விளக்கப்படுகின்றன. அல்லங்காடி என்பது சந்தைகளினை குறிக்கின்றது. இங்கு நாளங்காடி என்பது பகல் நேர கடைகள். அல்லங்காடி என்பது மாலை நேர அல்லது இரவு நேர கடைகள். சங்க இலக்கியங்களில் கடைகளினை நியமம், ஆவணம் என்றவாறாக அழைத்தார்கள். பகல் நேர சந்தையில் உணவுப் பொருள்கள் அதிக அளவு விற்பனை செய்யப்படுவதுடன் இரவு நேர சந்தையில் புலால் உள்ளிட்ட உணவுகள் உட்பட ஆபரணங்கள் அதாவது பொன் முத்துக்களினால் செய்யப்பட்ட ஆபரணங்களும் விற்பனை மேலும் செய்யப்பட்டது. சந்தைகள் இரண்டாம் சாமம் வரையில் இயங்கியவையாக இருந்தன.
மேலும் அங்காடி வீதிகள் எப்போதும் ஓசையுடன் காணப்படும் அத்துடன் மேலும் அவற்றின் காட்சி அமைப்பு ஓர் ஓவியமாக இருக்கும். அங்காடிகளில் பல வண்ணக் கொடிகள் அசைந்து கொண்டும் இருந்தன. இக்கொடிகள் வணிகரது 'அறநெறிப்பிறழா' தொழில் தர்மத்தைப் பறைசாற்றுவதோடு, கடைத்தொகுதிகளில் விற்கப்படும் விற்பனைப்பண்டங்களின் தன்மை விளக்கும் திசைகாட்டிகளாகவும் இவை அமைந்திருந்தன. இதனால் நுகர்வோன் அங்கும் இங்குமாய் அலையாது, தனக்குத் தேவையான அங்காடியை இலகுவில் இனங்கண்டு கொள்வான். இதுவே இன்றைய சந்தைப்படுத்தல் தந்திரோபாயத்துக்கும் வித்திட்டது.
உலகில் தோன்றிய நாகரிகங்களை அரசியல், சமூக, பொருளாதார மற்றும் வணிகக் கட்டமைப்புகள் மேலும் சமூக வாழ்வியல் குறித்து ஆய்வுக்குட்படுத்தப்படுகின்ற போது இருகருத்துக்கு இடமின்றி, விவாதிக்கப்பட வேண்டிய கருத்துருவாக தமிழர் தொன்மையும் பண்பாடும் விளங்குகின்றது. தமிழர் பண்பாடு என்பது தொடர்ச்சியான கற்றலின் வாயிலாகவும் செயற்பாட்டின் வழியாகவும் வரன்முறை, வரன்முறைவழியாக தமது முன்னோரிடமிருந்து பெற்றுக்கொண்டிருக்கும் தமிழர் வாழ்வியல் நடைமுறைகள், தமிழர் பண்பாட்டின் அடையாளங்கள் தமிழர் வாழ்வின் ஓர் அங்கமாக பிணைந்திருக்கும் ஏனைய செயற்பாடுகள் அனைத்தையும் பண்பாடு என்கிற பதத்துள் வாங்கிக்கொள்வர். சங்க இலக்கியங்கள் தமிழ்மொழியின் சிறப்பை இயம்புகின்ற ஒன்றாகவோ, மேலும் பண்டைய மொழி வழக்கினை அறிந்துகொள்ள உதவும் கருவூலமாக மட்டுமாகவோ நோக்காது தமிழர்களின் தொன்மையான பண்பாட்டின் அடிப்படை அம்சங்களைப் புரிந்துகொள்ளும் வாழ்க்கை நெறி, வாழ்வியல் சித்தாந்தங்கள், வரலாறு, அரசியல், பொருளாதார, சமூக, வணிகக் கட்டமைப்புக்கள் போன்றவற்றை புரிதலுக்கான அடிப்படையான மூலகங்களாகவும் நோக்கப்படவேண்டும். நிலையான அரசின் தோற்றத்தின் பின்னர் நாணயம் பொன், காசு, வெள்ளி முதலிய உலோகங்களில் காசுகள் அச்சிடப்பட்டன. மேலும் நாணயங்களைப் பரிசோதிக்க வண்ணக்கர் என அழைக்கப்படும் அரசினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் இருந்தனர். பண்டமாற்று பொருளாதாரத்தின் அஸ்தமனமும் நாணயப் புழக்கத்தின் எழுச்சியும் உள்நாட்டு வெளிநாட்டு வணிகத்தில் பெரிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தியது. உள்நாட்டு வியாபாரத்தில் நாளங்காடி, அல்லங்காடி வணிக நிலையங்களின் செயற்பாடுகள் உருவாகின.
அரசர்கள் மங்காப் புகழுடனும், குன்றாத செல்வத்துடனும் ஆட்சி புரிய, வணிகர்களிடமிருந்து அறவிடப்படும் உல்கு என்று அறியப்படும் வரி பெரும் பங்காற்றியது. மேலும் சுங்கம் வசூலிக்கப்படும் நிலையங்களின் ஊடாக (உல்கு உடைப்பெருவழி) சுங்கம் செலுத்தி பொருள்களை ஏற்றிச் சென்று வணிகம் செய்தார்கள். சுங்கம் செலுத்தியமைக்காக பொதிகளில் சோழனின் புலி இலச்சனையும் பொறிக்கப்பட்டது என்றும் பெரும் பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது.
தொகுத்துப்பார்க்கையில் உலகப்புகழ் பெற்ற கிரேக்க வணிகத்தையும் வணிக முறையையும் ஒத்தவாறானதொரு வணிகமும், வணிகமுறைமையும் சங்கத்தமிழர்களிடையே நிலைபெற்று நிறைவுடன் காணப்பட்டமை மெய்ப்படுகின்றது. துலக்கத்துலக்க லோகங்கள் மிளிர்வது போல், ஆய்வுகள் தொடர்ந்தால் தமிழர்தம் பனுவல் வழி வணிகம் வாழும், வளரும்.

■ முற்றும்

# அலெக்ஸ்பரந்தாமனுக்கு 'கலாபூஷணம்' விருது



இலங்கைக் கலைத்துறைக்குச் சேவையாற்றிய கலைஞர்களின் சேவையைப் பாராட்டி வழங்கப்படும் கலாபூஷண விருது வழங்கும் நிகழ்வு கடந்த 11ஆம் திகதி புதன்கிழமை கொழும்பு - மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பல்துறை சார்ந்த பல கலைஞர்கள் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். இதில் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் எழுத்துத்துறைக்கான விருதை அலெக்ஸ்பரந்தாமன் பெற்றுக்கொண்டார்.
இவர் "எண்பதுகளின் இறுதியில் உள்ளம்" எனும் கலை இலக்கிய சஞ்சிகையில் 'ஒருபிடி அரிசி' எனும் சிறுகதைமூலம் இலக்கிய உலகினுள் பிரவேசித்தவர், தொடர்ந்து பத்திரிகைத்துறையிலும் பல விடயங்களை எழுதி வந்துள்ளார். இவர் உதயன் ஊடகத்தில் ஒப்புநோக்குநராகவும் பத்தி எழுத்தாளராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டுப் பெருவிழாக்கள்

## யாழ்ப்பாணம்



வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் பண்பாட்டுப் பெருவிழா கடந்த 11ஆம் திகதி புதன்கிழமை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் பிரபாகரமூர்த்தி தலைமையில் மருதங்கேணி கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

முதல் நிகழ்வாக ஊர்திகள் முன்னே பவனிவர காவடி, நடனம் உட்பட்ட கலைஞர்கள் அணிவகுத்துவர பிரதம, சிறப்பு, கௌரவ விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வடமாராட்சி கிழக்கு கலாசார மண்டபத்தில் அமைந்திருந்த முத்தையா அரங்குவரை அழைத்துவரப்பட்டனர்.

தொடர்ந்து தமிழ்மொழி வாழ்த்து, வரவேற்பு நடனம், வரவேற்புரை தலைமையுரை என்பன இடம் பெற்றதுடன் வடமராட்சி கிழக்கு பிரதேச கலைஞர்களின் நடனம், நாடகம், கிராமியப் பாடல்கள், கவிதை, பாட்டு போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.



இந்நிகழ்வுகளில் இன்றைய அரங்கை காலஞ்சென்ற கலைஞர் அண்ணாவியார் முத்தையா ஞாபகார்த்தமாக இடம் பெற்றதுடன் அரங்கச் செயற்பாட்டு உரையை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக முன்னாள் கலாசார உத்தியோகத்தரும், தற்போதைய பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருமான கார்த்திகேயன் நிகழ்த்தியிருந்தார். விருந்தினராக யாழ். மாவட்டச் செயலாளர் சிவபாதசுந்தரன், வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் உதவிச் செயலாளர், ஆயுள்வேத வைத்தியர் ஜோகநாதன், யாழ். மாவட்டச் செயலக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர், பிரதேச சமூக சேவையாளரும் கலைஞருமான சோதிலிங்கம், மருதங்கேணி இலங்கை வங்கி முகாமையாளர், காத்தவராயன் கூத்து அண்ணாவியார் இராமநாதன் பிரதேச செயலர் பிரபாகரமூர்த்தி ஆகியோரும் வடமராட்சி கிழக்கு பிரதேசத்துக்குட்பட்ட பல்வேறு கலைஞர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (கஜிந்தன்)

## மன்னார்



வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையுடன் மன்னார் மாவட்டச் செயலகமும், மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து 2023 ஆம் ஆண்டுக்கான பண்பாட்டுப் பெருவிழாவை மன்னார் மாவட்டச் செயலகத்தில் அண்மையில் மிகச் சிறப்பாக நடத்தின.

விழாவின்போது, அதிதிகள் மற்றும் கலைஞர்கள் மன்னார் நகரின் சுற்று வலயத்திலிருந்து அழைத்து வரப்பட்டனர். மன்னார் மாவட்ட கலைஞர்கள் 18 பேர் 'மன் கலைச்சுரபி', 'மன் கலைத்தென்றல்' மற்றும் 'மன் கலைச்சுடர்' என்னும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.

மன்னார் மேலதிக மாவட்டச் செயலர் ய.பரந்தாமன் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில், பிரதம அதிதியாக வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிரஞ்சன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக பண்பாட்டலுவல்கள் அலகு கல்வி அமைச்சின் பிரதிப்பணிப்பாளர் திருமதி லா.நிரபராஷ் கலந்துகொண்டார்.



கலாபூஷணம் செபஸ்ரியான் மாசிலாமணி (நானாட்டான்), கலாபூஷணம் தம்பிப்பிள்ளை பர்ணாந்த பீரீஸ் (மன்னார் நகரம்), மன் கலைச் சுரபி சபாரட்ணம் சிவதாசன் (மாந்தை மேற்கு), கவிச்சுடர் அகமட் லெப்பே முளப்பர்கான் (முசலி) மற்றும் மன் கலைத்தென்றல் அலெக்ஸ் முடியப்பர் (மடு) ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (வாஸ் கூஞ்ஞ)

## பூநகரி



வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பண்பாட்டுப் பேரவையும், பூநகரி பிரதேசசெயலகமும் இணைந்து நடத்திய பிரதேச பண்பாட்டுப் பெருவிழா கடந்த 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி முட்கொம்பன் கிராமஅலுவலர் அலுவலகத்திலிருந்து இடம்பெற்றது.

பூநகரிப் பிரதேச செயலாளரும், பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான த.அகிலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிரஞ்சன், கௌரவ விருந்தினர்களாக வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் நி.லாகினி, கிளிநொச்சி முட்கொம்பன் மகா வித்தியாலய அதிபர் ப. ஜோயல் பியசீலன் மற்றும் கிராமமக்கள் பொலிஸார் இராணுவத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.



நிகழ்வில் பாரம்பரிய கலாசார உடையணிந்தும் கும்மி, காவடி, கரகாட்டம், கோலாட்டம் என்பன நடைபெற்றதுடன் இந்த நிகழ்வில் பல்வேறுபட்ட கலை நிகழ்வுகள், அதிதிகளின் உரைகளும் இடம்பெற்றன. கலைநகரி விருது வழங்கல் மற்றும் இளங்கலைஞர் விருது வழங்கல் முதலான கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(தேவி அனந்த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பகவல், விருத்தமாயிரம் நூல்கள் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழிசைக் கவித் தடாகம் அமைப்பின் ஏற்பாட்டில் கலைப்புட்பா கிறிட்டி எழுதிய அன்பகவல், விருத்தமாயிரம் நூல்களின் வெளியீட்டு நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் யாழிசைக் கவித் தடாகம் அமைப்பின் நிறுவுநர் உடுவிலூர் கலா தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் த.முகுந்தன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் இரட்ணராஜா கிருஷ்ணகுமார் கௌரவ விருந்தினராக கவிஞர் யாழ்பாவணன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-66)

## மாதகல் சித்திவிநாயகருக்கு கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஒக். 18

மாதகல் அரசடி சித்திவிநாயகர் ஆலய நூதன திரிதள இராஜகோபுர கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் காலை 7.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

இராஜகோபுர கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச-66)

## வரணி நூலகத்தால் சிறாருக்குப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.18

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வரணிப் பொதுநூலகத்தால் மாணவர்களிடையே நடத்தப்படும் போட்டிகள் வரணி பொதுநூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

தரம்-1 மாணவர்களுக்கு இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு சித்திரப் போட்டியும் தரம் -2 மாணவர்களுக்கு முற்பகல் 10.30 மணிக்கு ஒட்டுச் சித்திரப் போட்டியும், தரம்-3 மாணவர்களுக்கு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சொல்லாக்கமும் தரம் -4 மாணவர்களுக்கு அன்றையதினம் முற்பகல் 11 மணிக்கு திருக்குறள் போட்டியும் இடம்பெறவுள்ளன. (ச-159)

## புத்தகக்கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 18

இலங்கை கிளரேசியன் வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில் புத்தகக் கண்காட்சியொன்றும், மலிவு விற்பனையும் யாழ்ப்பாணம் மறைக்கல்வி நடுநிலையத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஒக்ரோபர் மாதம் 21, 22, 23, 24 என நான்கு நாள்கள் கொண்டதாக இந்தக் கண்காட்சி முன்னெடுக்கப்படவுள்ளது. காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கண்காட்சி இடம்பெறும். புத்தகக் கண்காட்சியின் ஒரு பகுதியாக முன்னெடுக்கப்படும் மலிவு விற்பனையில் 10 வீத விலைக்கழிவும் வழங்கப்படவுள்ளது. (ம)


# பெறுகை அறிவித்தல்
# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
# 2023

1. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம், அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட03/2020 (i) ஆம் இலக்க 11.01.2021 ஆம் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019, ஆம் திகதிய 04/2016 (iii) ஆம் இலக்க 18.02.2021 ஆம் திகதிய மற்றும் 04/2016(iv) ஆம் இலக்க 09.02.2023 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தைச் சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில், நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V** இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபை (தொலைபேசி : 0212250144, தொலைநகல் : 0212250144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 மணிவரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் இடத்தில் **18.10.2023 ஆம் திகதியிலிருந்து 02.11.2023 ஆம் திகதி வரை சனி ஞாயிறு தவிர்ந்த வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 14.00 வரை** மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா.3000 (வரி நீங்கலாக)** இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம். என்னும் முகவரிக்கு **03.11.2023 ஆம் திகதி பி.ப 02.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
8. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

| தொ. இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (VAT நீங்கலாக) (Mn) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேண்டப் படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப் படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம். | | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செல்லுபடியாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| | குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை(PSDG) பராமரிப்பு வேலைத்திட்டம் | | | | | | | |
| 01 | இறாத்தலடி வீதி – சுழிபுரம் புனரமைப்பு NP/14/41(17)/02/PSDG (Maintenance)/01/2023 | 0.635 Mn | 30 நாட்கள் | C9 & C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 22.12.2023 | 6,500.00 | 19.01.2024 |
| 02 | பண்ணாகம் வீதி 2 ஆம் ஒழுங்கை – சுழிபுரம் புனரமைப்பு NP/14/41(17)/02/PSDG (Maintenance)/02/2023 | 0.430 Mn | 30 நாட்கள் | C9 & C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 22.12.2023 | 4,500.00 | 19.01.2024 |
| | **சபைநிதி கட்டம் II** | | | | | | | |
| 01 | **சங்கானை பகுதி வீதிகள் புனரமைப்பு** (தேவாலய வீதி 3 ஆம் கிளை ஒழுங்கை, அறிவகம் 2 ஆம் வீதி NP/14/41(17)/02/CF/01/ Cha/2023 stage II | 1.075 Mn | 30 நாட்கள் | C9 & C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 22.12.2023 | 11,000.00 | 19.01.2024 |
| 02 | **வட்டுக்கோட்டை பகுதி வீதிகள் புனரமைப்பு–குழு I** (ஓடக்கரை வீதி, நொத்தாரிசு வீதி, NP/14/41(17)/02/CF/02/ Vaddu-I/2023 stage II | 3.505 Mn | 45 நாட்கள் | C9, C8 & C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 05.01.2024 | 36,000.00 | 02.02.2024 |
| 03 | **வட்டுக்கோட்டை பகுதி வீதிகள் புனரமைப்பு– குழு II** (துங்கோடை வீதி, சீக்காய் வீதி டச்சு வீதி நாலாம் ஒழுங்கை ) NP/14/41(17)/02/CF/03/ Vaddu-II//2023 stage II | 2.150 Mn | 45 நாட்கள் | C9, C8 & C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 05.01.2024 | 22,000.00 | 02.02.2024 |
| 04 | **சுழிபுரம் பகுதி வீதிகள் புனரமைப்பு** (கேணிக்கடவை வீதி, கண்டாமை வீதி1 ஆம் ஒழுங்கை, கம்பானை அம்மன் வீதி 3 ஆம் ஒழுங்கை. நெல்லியான் வீதி கிளை ஒழுங்கை, காளி கோவில் முன் வீதி இரண்டாம் ஒழுங்கை, காரைநகர் கம்மாலை வீதியின் இணைப்பு வீதி NP/14/41(17)/02/CF/04/ Chu/2023 stage II | 3.000 Mn | 45 நாட்கள் | C9, C8 & C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 05.01.2024 | 30.000.00 | 02.02.2024 |
| 05 | **அராலி பகுதி வீதிகள் புனரமைப்பு** (நாகம்மாள் வீதி, உடையார் வீதி, செட்டி குறிச்சி பிள்ளையார் கோவில் வீதி இடது பக்க முதலாம் வீதி) NP/14/41(17)/02/CF/05/ Araly/2023 stage II | 2.825 Mn | 45 நாட்கள் | C9, C8 & C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 05.01.2024 | 28,500.00 | 02.02.2024 |

கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் **24.10.2023** அன்று **பி.ப.14.00** மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தசெலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
18.10.2023


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரை ஒடுக்குவதற்கே பல்கலை விடுதிச்சோதனை

## மாணவர் ஒன்றியம் எதிர்ப்பு

கொழும்பு, ஒக். 18
பகிடிவதையைத் தடுக்கும் நோக்குடன் பல்கலைக்கழக விடுதிகளில் இரவு வேளைகளில் திடீர் சோதனைகளை மேற்கொள்வதற்கு உயர்நீதிமன்றம் விடுத்த உத்தரவுக்கு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இதுதொடர்பில் விடுக்கப்பட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இரவு நேரச் சோதனைகள் மூலம் பகிடிவதையை ஒழிக்க முடியாது. இந்த நடவடிக்கை மாணவர்களின் சுயாதீனத்தை ஒடுக்கும் செயற்பாடாகும்.

இது மாணவர்களது அடிப்படை மனித உரிமைகளை பறிப்பதற்கு ஒப்பானது. அரசாங்கம் இரவு நேரச் சோதனை என்ற பெயரில் மாணவ செயற்பாட்டாளர்களைக் கைது செய்ய முயற்சிக்கிறது. அதற்காகவே இப்படி ஒரு நாடகமாடுகிறது. உண்மையிலேயே மாணவர்களைப் பாதுகாக்க விரும்பினால் விடுதிகளை எட்டிப்பார்ப்பதை நிறுத்தவேண்டும் - என்றுள்ளது. (ச-6)

# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

## நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை, ஆட்டிறைச்சிக்கடை, கோழிஇறைச்சிக்கடை / சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன்கடை, கோழியிறைச் சிக்கடை, சாளம்பைக்குளம் கடை, குளுமாட்டுச்சந்தி கடைத்தொகுதி, ஓமந்தை கடைத்தொகுதி, கோமரசங்குளம் மாட்டிறைச்சிக்கடை, ஓமந்தை உணவகம், நடாத்துவதற்கான கேள்வி அறிவித்தல் - 2024

01. வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை எல்லைக்குள் அமைந்த **நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை. ஆட்டிறைச்சிக்கடை. கோழிஇறைச்சிக்கடை / சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை. மீன்கடை. கோழியிறைச்சிக்கடை. சாளம்பைக்குளம் கடை / குளுமாட்டுச்சந்தி கடைத்தொகுதி. ஓமந்தை கடைத்தொகுதி. கோமரசங்குளம் மாட்டிறைச்சிக்கடை ஓமந்தை உணவகம்.** போன்றவற்றை 2024 ஆம் ஆண்டு தை மாதம் 01ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நடாத்துவதற்கான கேள்விகள் 2023.10.18 தொடக்கம் 2023.11.01ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. கேள்விப்படிவங்கள் கீழ்க்காட்டப்படும் கேள்விப் பிணைப்பணம். கேள்விப் பத்திரக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்தி இவ்வலுவலகத்தில் 2023.11.01 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்களில் ஒரு பிரதி **செயலாளர்.வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. நேரியகுளம் வீதி. நெளுக்குளம். வவுனியா"** என்ற முகவரிக்கும். ஒரு பிரதி **"பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர். பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். பூங்கா வீதி. வவுனியா"** என்ற முகவரிக்கும் இடப்பட்டு. பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரோ நேரத்திற்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

03. 2023.11.01ஆம் திகதி பிற்பகல் 02.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும். கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும்போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டவர் சமூகமாக இருக்க அனுமதிக்கப்படும்.

04. கேள்விதாரர் இலங்கைப் பிரஜையாகவும் வவுனியா மாவட்டத்தினை சேர்ந்தவராகவும் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருக்க வேண்டும். கறுப்பு நிரலில் உள்ளவருக்கு கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது.

05. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும்.

06. குத்தகைக்காலம் 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியினை கொண்டதாக இருக்கும்.

07. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து சபையினால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் தங்களால் கோரப்படும் கேள்வித்தொகையில் 1/3 பகுதியையோ அன்றி முழுவதையுமோ காரியாலயத்தில் செலுத்தி கடைக்கான உடன்படிக்கையை பூர்த்தி செய்தல் வேண்டும்.

08. கேள்வித்தொகையின் மிகுதி 1/3 பகுதியினை 8 சம தவணைக் கட்டணங்களாக செலுத்துதல் வேண்டும். மாதாந்த கட்டுப்பணங்களை மாதம் முடிந்து ஐந்து நாட்களுக்குள் சபைக்குச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னதாக குத்தகைப்பணம் முழுவதும் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன் காலத்துக்குக்காலம் அரசாங்கத்தால் விதிக்கப்படும் VAT, NBT என்பனவும் செலுத்தப்படல் வேண்டும். இக்கால அவகாசத்திற்குள் குத்தகைப்பணத்தை செலுத்தத் தவறும் கேள்விதாரரின் வைப்புப்பணம் பறிமுதல் செய்வதுடன். கேள்வி விண்ணப்பம் சமர்ப்பித்து கேள்வியினை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு கேள்வி வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர்களது பெயர் கேள்விகோரும் தகுதியுடையவர்களின் நிரலிலிருந்து நீக்கப்படுவதுடன் கறுப்புப் பட்டியலிலும் சேர்த்துக்கொள்ளப்படும்.

09. ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கான வாடகைப் பணத்தினை மாதம் முடிந்து ஐந்து நாட்களுக்குள் சபைக்குச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

10. கேள்வி கோரும் போது சித்தி பெறும் குத்தகைப்பணத்தினை குறித்த கால எல்லைக்குள் கட்டுவதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

11. கேள்வி அறிவித்தலுக்கும். நிபந்தனைகளுக்கும் அமைவாகவே கேள்விகளை அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரத்தில் கொடுக்கப்படும் விபரங்கள் உண்மையாகவும் சரியானவையாகவும் இருப்பதுடன் இவைகளை அத்தாட்சிப்படுத்தும் பொறுப்பும் கேள்விதாரரைச் சார்ந்தது. கேள்விப்படிவங்களைப் பெற முன்பும் அதற்குப் பின்பும் நிபந்தனைக்குரிய அத்தாட்சியினை சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருப்பது அவசியமானது.

12. இறைச்சி. மீன்கடைகளில் வழங்கப்படும் இறைச்சிகள். மீன்கள் சுத்தமாகவும். நோயற்ற இறைச்சியாகவும் நிறை சரியாகவும். சபையினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் விலை விகிதாசாரப்படியே பொது மக்களுக்கு விற்பனை செய்தல் வேண்டும். நடமாடும் மற்றும் கோழி வியாபாரிகள் அக் கடையிலிருந்து சுற்றுவட்டாரம் 500மீற்றர் தூரத்திற்குள் மீன் மற்றும் கோழி வியரபாரத்தில் ஈடுபடமுடியாது.

13. சுகாதாரப்பரிசோதகரால் அனுமதிக்கப்பட்ட இறைச்சியை. மீனை மட்டுமே கடையில் வைத்து விற்பனை செய்தல் வேண்டும். இவை தவிர வேறு இறைச்சியையோ அல்லது உணவுக்கு ஒவ்வாத இறைச் சியையோ. மீனையோ விற்பனை செய்தால் அவ் இறைச்சியை. மீனை பறிமுதல் செய்வதுடன் ஒப்பந்தமும் இரத்து செய்யப்படும்.

14. தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு மேல் சித்திபெற்ற மாதாந்த கட்டுப்பணத்தினை செலுத்த தவறின் எதுவித அறிவித்தலுமின்றி குத்தகை இரத்துச்செய்யப்பட்டு ஒப்பந்த பிணைப்பணத்தினை சபையின் நிதியத்திற்கு மாற்றும் அதிகாரம் சபைக்கு அல்லது செயலாளருக்கு உண்டு.

15. இங்கு அறிவிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் ஒப்பந்த சரத்திற்கு அமைவாகவும் என்னால் காலத்திற்கு காலம் எழுத்து மூலம் விதிக்கப்படும் ஏனைய நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

16. யாதொரு காரணமும் காட்டாது கேள்வி முழுவதையுமோ. அல்லது கேள்வியின் பகுதியையோ ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கும் எனக்கும் உரிமையுண்டு.

17. மீன் விற்பனையைப் பொறுத்த மட்டில் மீன்களும் தரமானதாகவும் நல்லதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்தல் வேண்டும்.

18. உரிய நேரத்தில் கேள்விப்படிவங்களை சமர்ப்பிக்காத கேள்விதாரின் கேள்விப்பிணைப்பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.

19. குத்தகைக்கு எடுத்தவர் உபகுத்தகைக்கு விடுவது தெரியப்படும் சந்தர்ப்பத்தில் குத்தகை உரிமை இரத்துச் செய்யப்படும்.

20. குத்தகை எடுத்தவரே அலுவலக தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

21. மேலே சொல்லப்பட்ட கேள்வி நிபந்தனைகள் அனைத்தையும் ஒப்புக்கொண்டே கேள்விகள் அனுப்புதல் வேண்டும்.

22. மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாக சமூகமளித்து பெற்றுக் கொள்ளலாம்.

| தொ.இல | கடை விபரம் | 2024 கேள்வி கோர வேண்டிய தொகை | மாத வாடகை | கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்வி படிவ கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை | 658215.44 | 1500.00 | 25000.00 | 2000.00 |
| 2 | நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை | 853087.15 | 2000.00 | 25000.00 | 2000.00 |
| 3 | சாளம்பைக்குளம் மீன்கடை | 148972.18 | 1500.00 | 25000.00 | 2000.00 |
| 4 | சாளம்பைக்குளம் கோழியிறைச்சிக்கடை | - | 3993.00 | 36000.00 | 2000.00 |
| 5 | சாளம்பைக்குளம் கடை | | 3080.00 | 36000.00 | 2000.00 |
| 6 | நெளுக்குளம் கோழிறைச்சிக்கடை | 283717.50 | 2000.00 | 25000.00 | 2000.00 |
| 7 | நெளுக்குளம் ஆட்டிறைச்சிக்கடை | 380000.00 | 2000.00 | 25000.00 | 2000.00 |
| 8 | குளுமாட்டுச்சந்தி மீன்கடை 01 வலது | | 2090.00 | 25000.00 | 2000.00 |
| 9 | குளுமாட்டுச்சந்தி மீன்கடை 01 இடது | | 2090.00 | 25000.00 | 2000.00 |
| 10 | குளுமாட்டுச்சந்தி மீன்கடை 02 வலது | | 2035.00 | 25000.00 | 2000.00 |
| 11 | குளுமாட்டுச்சந்தி மீன்கடை 02 இடது | | 2035.00 | 25000.00 | 2000.00 |
| 12 | குளுமாட்டுச்சந்தி மீன்கடை 03 வலது | | 1980.00 | 25000.00 | 2000.00 |
| 13 | குளுமாட்டுச்சந்தி மீன்கடை 03 இடது | | 1980.00 | 25000.00 | 2000.00 |
| 14 | குளுமாட்டுச்சந்தி மீன்கடை 04 வலது | | 1925.00 | 25000.00 | 2000.00 |
| 15 | குளுமாட்டுச்சந்தி. மீன்கடை 04 இடது | | 1925.00 | 25000.00 | 2000.00 |
| 16 | ஓமந்தை கோழியிறைச்சிக்கடை | | 803.85 | 25000.00 | 2000.00 |
| 17 | கோமரசங்குளம் மாட்டிறைச்சிக்கடை | 117897.38 | 1500.00 | 25000.00 | 2000.00 |
| 18 | ஓமந்தை உணவகம் | | 4831.20 | 25000.00 | 2000.00 |
| 19 | ஓமந்தை மீன்கடை | | 803.85 | 25000.00 | 2000.00 |
| 20 | ஓமந்தை கடை 01 | | 803.85 | 25000.00 | 2000.00 |
| 21 | ஓமந்தை கடை 02 | | 803.85 | 25000.00 | 2000.00 |

**செயலாளர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.**
**2023-10-18**

(cr.40784) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மையை...

இது தொடர்பில் நாடாளுமன்றின் நேற்றைய அமர்வில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் மீண்டும் ஒரு தெரிவுக்குழுவை நியமிப்பது பயனற்றது. இது மக்களை ஏமாற்றும் முயற்சி. இதனூடாக சிறந்த விசாரணையை முன்னெடுக்கமுடியாது. இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துங்கள். அத்துடன் 'சனல்-4' அலைவரிசையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்கள் அனைத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அதனால் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டிருக்கும் விடயங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர்.

எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துகளுக்குப் பதிலளித்த அரச தரப்பு பிரதம கொறடா பிரசன்ன ரணதுங்க தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் 'சனல் - 4' அலைவரிசையில் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சியின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவை நியமிப்பதால் ஏனைய விசாரணைகளுக்கு பாதிப்பு ஏற்படாது. தாக்குதலுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாங்களும் இருக்கிறோம். அத்துடன் கத்தோலிக்க சபை முன்வைக்கும் விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினால் விசாரணை செய்ய முடியாது. அதனைப் பாதுகாப்பு தரப்பினரே முன்னெடுக்கவேண்டும். அதனால் தற்போது அமைக்கவுள்ள நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவினால் இந்த விசாரணைகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது - என்றார். (அ-ம)

## தேசிய...

வரைவு நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. பிரதான சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்படி சட்டவரைவை சபையில் முன்வைத்தார்.

இந்தச் சட்டவரைவானது, 'இலங்கையில் தேசிய ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்தி, ஊக்குவிக்கும் பொருட்டு தேசிய ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை எடுத்துக் கூறுவதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டவரைவாகும்' என சட்டவரைவின் நோக்கம் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ம-44)

## குருந்தூர்மலையில்...

குறித்த பகுதியில் புத்தசாசன அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பல திணைக்களங்களின் அதிகாரிகள் இணைந்து நேற்றுக் கள ஆய்வை மேற்கொண்டுள்ளனர்.

புத்தசாசன அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரண, ஜனாதிபதி செயலக வடமாகாண இணைப்பாளர் எல். இளங்கோவன், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன், மேலதிக மாவட்டச் செயலர்கள் மற்றும் பிரதேச செயலர்கள், தொல்பொருள் திணைக்கள உயர் அதிகாரிகள், வன உயிரிகள் திணைக்கள உயர்அதிகாரிகள், வனவளத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள், காணி தொடர்பிலான திணைக்கள உயர் அதிகாரிகள் உள்ளிட்டோரே இவ்வாறு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

குருந்தூர்மலையில் குருந்தி விகாரை அமைக்கப்பட்டுள்ள பகுதியே ஆதிசிவன் ஐயனார் ஆலயம் அமைக்கப்பட்டிருந்த பகுதியாகும். எனினும், அந்தப் பகுதியை அபகரித்துக்கொண்டு அதற்குப் பதிலாக அந்த வட்டாரத்தில் பிறிதொரு பகுதியை வழங்கி இந்தப் பிரச்சினையை நீர்த்துப்போகச் செய்வதற்கு அரசாங்கம் முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ள நிலையில், அதிகாரிகள் நேற்றையதினம் இவ்வாறு கள ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-19)

## இலங்கையில்...

இலங்கை மத்திய அரசாங்கத்தில் ஊழல் மலிந்து காணப்படுகிறது. இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் வெளிப்படைத்தன்மையுடனும் பொறுப்புக்கூறுவதாகவும் அமையும் வகையில் இலங்கையை வலியுறுத்தவேண்டுமென சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கையைச் சேர்ந்த நிதி நிபுணர்கள் குழுவொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

நிதி நிர்வாகம், ஊழல் தடுப்பு போன்ற விடயங்களில் நிபுணத்துவம் வாய்ந்த, ஆய்வுகளை மேற்கொள்ளும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் அண்மையில் இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன்கலந்துரையாடல்ஒன்றை நடத்தியிருந்தனர். இந்தக் கலந்துரையாடலிலேயே மேற்படி விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் வரிவருமானத்தில் 70 வீதம் கடன்களுக்கான வட்டி செலுத்துவதற்கே செலவிடப்படுகிறது. இதை 50 வீதமாகக் குறைக்குமாறு சர்வதேச நாணய நிதியம் ஆலோசனை வழங்கியுள்ளது. எனினும்அரசாங்கம்இதை குறைப்பதற்குத் தயாராக இல்லை எனவும் இந்தக் கலந்துரையாடலின் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-ம-6)

## ஹமாஸின்...

அவர்கள் காஸாவின் வடக்குப் பகுதியில் இருந்து தெற்குப் பகுதி நோக்கி தற்போது நகர்ந்து செல்கின்றனர் என்று இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'காஸாவில் 27 இலங்கையர்கள் அகப்பட்டுள்ளனர். காஸா பகுதியின் வடக்குப் பகுதியிலிருந்து தெற்குப் பகுதிக்கு அவர்கள் தற்போது இடம்பெயர்ந்து வருகின்றனர். பலஸ்தீன அலுவலகத்தில் உள்ள எமது பலஸ்தீன பிரதிநிதி இதனைத் தெரிவித்துள்ளார். இந்த 27 பேரும் அடுத்ததாக எகிப்துக்கு பயணம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில், சுமார் 150 இஸ்ரேலியர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் ஹமாஸ் அமைப்பிடம் பணயக்கைதிகளாக இருக்கின்றனர் என்று செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. கைது செய்யப்பட்ட அனைவரின் விவரங்களையும் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இவர்களில் இலங்கையர்கள் உட்பட 36 நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டவர்களும் அடங்குவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த விவரங்கள் கிடைத்தால், அந்த இடத்தில் காணாமற்போன இலங்கையரைப் பற்றிய தகவலைப் பெறமுடியும் என்று நான் நினைக்கிறேன்' - என்றார். (அ-ம)

## 10 வீத...

இலங்கையில் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 10 வீதமானவர்களுக்குத் தொழுநோய் பாதிப்பு உள்ளது என்று சுகாதார அமைச்சின் தொழுநோய் தடுப்புப் பிரிவு அறிக்கையிட்டுள்ளது.

இது தொடர்பில் தொழுநோய் எதிர்ப்புத் திட்டத்தின் பணிப்பாளர் பிரசாத் ரணவீர தெரிவித்ததாவது:-

தொழுநோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைக் கொண்ட ஒரு நாட்டில் குழந்தைத் தொழுநோயாளிகளின் எண்ணிக்கை 4 சத வீதத்துக்கு மேற்படாதிருக்கும். இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மாத்திரம் இலங்கையில் சுமார் ஆயிரத்து 155 தொழுநோயாளிகள் பதிவாகியுள்ளனர். இலங்கையில் இந்த நோய்நிலை தீவிரமாகும் நிலையில் அதற்கெதிராக கடும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அவசியம் - என்றார். (அ-ம)

## ஈஸ்டர்...

வுமே முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், எந்தவொரு விசாரணைக் குழுவுக்கும் வழங்கக்கூடாது என்ற அடிப்படையில் இரகசியக் கோப்புகளும் கையளிக்கப்பட்டுள்ளன என்று சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தும் எந்தவொரு குழுக்களுக்கும் வழங்க முடியாத இரகசிய அறிக்கைகள் உள்ளன என்று பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பு ஆலோசகர் பேராசிரியர் ரொஹான் குணரத்ன ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். இவற்றை ஒருபோதும் பகிரங்கப்படுத்த முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

நான் ஜனாதிபதியாக இருந்தபோது நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு, தனது அறிக்கையை ஜனாதிபதியிடம் (கோத்தாபய ராஜபக்ச) கையளிக்கும்போது பிரத்தியேக கோப்பு ஒன்றையும் வழங்கியுள்ளது. சட்டமா அதிபருக்கோ, புலனாய்வு பிரிவுக்கோ அல்லது பொலிஸாருக்கோ இதனை வழங்க வேண்டாம், தனிப்பட்ட ரீதியில் வைத்துக்கொள்ளுங்கள் எனக் கூறிவிட்டே வழங்கியுள்ளனர்.

தம்மிடம் உள்ள கோப்புகள் இரகசியமானவை, அவற்றை விசாரணைகளுக்கு வழங்க முடியாது என ஒருபுறம் பேராசிரியர் ரொஹான் குணரத்ன கூறுகின்றார், மறுபுறம் இதனை யாருக்கும் வழங்க வேண்டாம் எனக்கூறி கோத்தாபய ராஜபக்சவிடமும் கோப்பு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது. எனவே, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அனைத்து விசாரணைகளும் அநீதியாகவும், தவறாகவுமே முன்னெடுக்கப்பட்டுள்ளன, ஏனெனில் முழுமையான அறிக்கைகள் இல்லை. 'சனல் - 4' தொலைக்காட்சி வெளியிட்டிருந்த காணொளி தொடர்பில் விசாரணை மேற்கொள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க முற்படுகின்றனர். நாடாளுமன்றத்தில் உள்ள கல்விப்புலமை கொண்டவர்கள், சிறந்த அனுபவம் கொண்டவர்களை சபாநாயகர் இந்தக் குழுவுக்கு நியமிக்கவேண்டும். அதற்கு மாத்திரமே நான் இணக்கம் வெளியிடுகிறேன்' - என்றார். (அ-ம-44)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. ஆதாயம் உண்டாகும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செலவுகள் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை. உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியும் உற்சாகமும் பெறுவீர்கள்.

**சிம்மம்:** உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாலையில் குடும்பத்தினருடன் சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வழிபடுவது நலம் தரும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம்.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். திடீர் செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர் வருகை உற்சாகம் தரும். வியாபாரம் எதிர்பார்த்தபடி இருக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். உறவுகளால் எதிர்பாராத பணவரவுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படும் நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மகரம்:** அனுகூலமானநாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதரவகையில்செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்தநாள். பிணக்குகள் நீங்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். தாயின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனக ரத்நாயக்கவிடம் கப்பம் கோரிய சங்கா?

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.18

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரான கோடீஸ்வரர் ஜனக ரத்நாயக்கவை கொலை செய்வதைத் தவிர்ப்பதற்காக திட்டமிட்ட குற்றக் குழு ஒன்று 15 இலட்சம் ரூபாவைக் கப்பமாக கோரியமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கொழும்புப் பிரதேசத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

டுபாயில் பதுங்கி வாழும் புளூமண்டல் சங்காவே இவ்வாறு கப்பம் கோரினார் என்று கூறப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை 7.10 மணிக்கும் 9 மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் புளூமண்டல் சங்கா என தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட நபர், 'உங்களைக் கொலை செய்வதற்காக 80 இலட்சம் ரூபாவுக்கு ஒப்பந்தம் ஒன்று என்னிடம் வழங்கப்பட்டுள்ளது. அந்தஒப்பந்தத்தைநிறைவேற்றாதிருக்க தனக்கு 15 இலட்சம் ரூபா தேவைப்படுகிறது" என ஜானக ரத்நாயக்கவிடம் கூறியுள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த அழைப்பின் பிரகாரம் முறைப்பாட்டாளரான ஜனக ரத்நாயக்க தனது அலுவலகத்தில் உள்ள பணத்திலிருந்து 15 இலட்சம் ரூபாவை தன்னை அழைத்த நபரிடம் ஒப்படைக்குமாறு பணியாளருக்கு அறிவித்திருந்தார் எனவும் தெரியவந்துள்ளது.

(எ-இ)


### வீட்டுப்பணிப்பெண் தேவை

யாழ்.நகரில் தங்கிநின்று வீட்டு வேலை செய்வதற்கு நல்லொழுக்கமுடைய பெண் தேவை. 077 2162 622

### வீடு வாடகைக்கு தேவை

நல்லூரில இருந்து நீர்வேலி வரையான பகுதியில் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்று அவசரமாக வாடகைக்கு தேவைப்படுகின்றது.

077 648 8354

### மணமகள் தேவை

01. இணுவில், இந்து, கௌரவகுலம் (V), 1990, அனுசம், Quantity Surveyor, Australia மணமகனுக்கு மணமகள் தேவை.
02. சுதுமலை, இந்து, கௌரவகுலம் (V), 1975, மிருகசீரிடம், BA Graduate, Australia மணமகனுக்கு மணமகள் தேவை.
03. கந்தர்மடம், இந்து, கௌரவகுலம் (V), 1989, உத்தராடம், MSc, Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
04. தெல்லிப்பளை, இந்து, கௌரவகுலம் (V), 1988, உத்தரம், BSc Civil Engineering, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
05. கரவெட்டி, இந்து, கௌரவகுலம் (V), 1988, திருவோணம், Customer Advisor, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
06. Kokuvil, இந்து, கௌரவகுலம் (V), 1987, சித்திரை, London A/L, Dip in IT, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
07. சுருவில், இந்து, கௌரவகுலம் (V), 1987, அச்சுவினி, MSc, அவுஸ்ரேலியா மணமகனுக்கு மணமகள் தேவை.
08. தெல்லிப்பளை, இந்து, கௌரவகுலம் (V), 1987, புனர்பூசம், BSC, Civil Engineer, Singapore மணமகனுக்கு மணமகள் தேவை.
09. நீர்வேலி, இந்து, கௌரவகுலம் (V), 1986, அத்தம், Dip in Edu, கனடா மணமகனுக்கு மணமகள் தேவை.

S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193
Phone - 077 539 3728


# எம்.பி.யானார் அலி லாஹிர்

கொழும்பு, ஒக்.18

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரான அலி ஸாஹிர் மௌலானா, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினராக நேற்று உறுதியேற்றார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடியது. அதிலேயே அவர் நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் பதவியில் இருந்து சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் நீக்கப்பட்டது சட்ட ரீதியானது என உயர் நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தது. கட்சியின் தீர்மானத்தை மீறி 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு வாக்களித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் பதவியில் இருந்து அமைச்சர் நஸீர் அஹமட் நீக்கப்பட்டார். இந்த நீக்கலுக்கு எதிராக அமைச்சர் நஸீர் அஹமட் உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கிலேயே மேற்படி தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

அமைச்சர் நஸீர் அஹமட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வறிதானதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில்அலிசாஹிர்மௌலானாநியமிக்கப்பட்டுள்ளார். கடந்த தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது சொந்தச் சின்னமான மரத்திலேயே போட்டியிட்டது. ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியது.

நஷீர் அஹமட் நாடாளுமன்றம் வந்தார். அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்துள்ளதால், விருப்பு வாக்குப் பட்டியலில் அடுத்த இடத்தில் இருந்த அலிசார் மௌலானா நாடாளுமன்றம் வந்துள்ளார்.

(எ-44)


### மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 01 . 1938



மறைவு 16 . 10 . 2023

### திரு.காசிப்பிள்ளை தவராசா

(ஓய்வுபெற்ற அதிபர், யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.காசிப்பிள்ளை தவராசா அவர்கள் கடந்த (16.10.2023) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வேலணை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற காசிப்பிள்ளை (பொன்னம்பலம்) சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதிப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்புக் கணவரும், அன்பரசி (ஆசிரியர், யா/அத்தியார் இ.க.), குகவரதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிசாகரன் (Brown & Company Agriculture Division), அமிர்தினி (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, சிவமணி மற்றும் சகுந்தலாதேவி (சுவிஸ்), பத்மநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற யோகம்மா, கணேசபிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும், சோபவித்யன், கேதாகரன் (யா/இ.கல். மாணவர்கள்), கவினயா (மாணவி, யா/இ.ஆ.பா), சூர்யா (ஜேர்மன்), சைந்தவி (ஜேர்மன்), சாருஜன் (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2023) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

பருத்தித்துறை வீதி,
கட்டப்பிராய், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 2842 433

(CS 26641) A-1




# இஸ்ரேல் - காஸா மோதல் யாழில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.18

இஸ்ரேல் - பலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்கிடையில் இடம்பெற்று வரும் மோதல் குறித்து யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஒன்றியம் மற்றும் கல்விச்சமூகம் ஆகியவற்றின் நிலைப்பாடு தொடர்பில் ஆராய்வதற்கான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சுண்டுக்குளி புனித திருமுழுக்கு ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் இஸ்ரேல் - பலஸ்தீனம் ஆகிய நாடுகளின் மோதல்கள், போரில் சிக்கியுள்ள மக்களின் நிலைப்பாடு, இலங்கை, இந்தியா நாடுகளின் ஆதிக்கத் தன்மை, இந்த மோதல் தொடர்பில் சர்வதேச பார்வைகள், தேசிய இனத்தின் அழிவுக்கான பாதை, மனித உரிமைகள் மீறல், ஒடுக்கப்படுகின்ற தேசிய இனம், அரசபயங்கரவாதம், கமாஸ் பயங்கரவாதச் சட்டம் ஆகியவை பற்றி அலசப்பட்டன.

நிகழ்வில் ஏற்புரையை அருட்தந்தை ஏ.வி.சி. ரவிச்சந்திரன் ஆற்றினார். சிறப்புப் பேச்சாளராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசியல்துறை விரிவுரையாளர் கே.ரீ.கணேசலிங்கம் பங்கேற்றார்.

கலந்துரையாடலில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், கல்வியியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ச-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.